NEW TRINCO STATIONERS
இலவச ரிசீவர் -
பதிவு செய்யும் திறனுடன்
1, 3, 6, 12
மாதங்களுக்கான சன் டிரக்ட்
மேலும் அனைத்து வகையான
செய்மதி தொலைக்காட்சி சேவைகளும்
026 2223071, 077 7697184

அறைவு 01 இயம் 54

August 03 - 09 2013

# மலைமுரசு

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை - 25.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் - 16 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

மலைமுரசு
MALAIMURASU
159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 - 0777555738

## மற்றோர் நன்நாள்....!

இன்றுடன் ஆண்டொன்றைத் தாண்டி மலைமுரசு தனது பயணத்தைத் தொடர்கின்றது.

எனது முதலாவது ஆசிரிய எழுத்துக்களில் கூறியது போல மற்றொரு நன்நாளில் உங்களை முன்பக்கத்தில் சந்திப்பேன் என்ற எனது உறுதிமொழியை இன்றைய நாளில் அடைந்தது வாசகர்களாகிய உங்களின் ஆதரவினால் மட்டுமே நடந்தேறியுள்ளது.

இம் முதலாண்டு நிறைவில் மலைமுரசு தான் வழங்கிய உறுதிமொழிக்கேற்ப பக்கச்சார்பற்ற தனது நிலையை இப்பயணத்தில் நிலைநிறுத்தியுள்ளது என்பதை நீங்கள் அனைவரும் உணர்ந்திருப்பீர்கள்.

மலைமுரசின் செய்திகள் ஆதாரங்களின்றி வெளி வரவில்லை. அச் செய்திகள் மக்களின் இரசனைக்கேற்பச் சமைக்கப்படவோ அல்லது மெருகூட்டப் படவோ இல்லை. செய்திகள், உண்மைத் தன்மை சீர்கெடாமல் உச்சப் பண்புள்ள மொழிநடைகளின் ஊடாக உங்களை வந்தடைந்துள்ளன.

50 வாரத்தைக் கடந்தவுடன் மலைமுரசின் பயணம் கிழக்கெங்கும் பரிணமித்துள்ளது. மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் தனது பயணத்தைத் தொடர்ந்துள்ள மலைமுரசு சிறுகச் சிறுக தனது வாசகர்களை அம் மாவட்டங்களில் சேகரித்து வருகின்றது.

பலபேரின் முயற்சியாலும், நூற்றுக்கணக்கானவரின் வாழ்த்துக்களாலும் இப்பயணம் தொடர்கின்றது... மற்றோர் நன்நாளை நோக்கி...

அன்பானவர்களே! உங்கள் வலக்கரம் நீட்டி எங்களை அணைத்துக் கொண்டு மறுகரம் நேர்வழிகாட்டப் பயணியுங்கள் மலைமுரசுடன்!!!!

மற்றோர் நன்நாளில் முன்புறத்தில் உங்களைச் சந்திக்கும்வரை.......

அன்புடன்
ஆசிரியர்.

# கல்வியில் திருமலை பின்தங்கியுள்ளது....

கிழக்கு மாகாணத்தில் ஏனைய இரண்டு மாவட்டங்களை விடவும் திருகோணமலை மாவட்டமே கல்வியில் பின்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.எம்.ரி.எம். நிசாம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதற்கு அதிபர்கள் யுத்தத்தைக் காரணம் காட்டி தப்பித்துக் கொள்ள முயல்வதை இனிமேல் நிறுத்திக் கொள்ள வேண்டும். யுத்தம் எம்மை விட்டுப் போனாலும் யுத்தத்தை நாம் இழுத்துக் கொண்டிருப்பது நாம் சமூகத்துக்குச் செய்து கொண்டிருக்கின்ற துரோகம் என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

2010ஆம் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தர மற்றும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கிழக்கு மாகாண பாடசாலைகள் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தில்

15

# நஞ்சூட்டப்பட்ட குழந்தைகள்

(அனுரசிறி/உதயராஜ்)

திருகோணமலை, சேருநுவர பிரதேசத்தின் மகிந்தபுர கிராமத்தில் 13 வயதான மூன்று பெண்குழந்தைகள் நஞ்சூட்டப்பட்ட நிலையில் திருமலைப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜூலை 31ம் நாள் மாலை நான்கு மணியளவில் பாடசாலையிலிருந்து அவர்கள் வாந்தியெடுத்து மயக்கமடைந்ததைத் தொடர்ந்து ஈச்சிலம்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு.....

15

## குடும்பத் தகராறு காரணமா?

# மரணம் நோக்கிய பயணம்



மட்டக்களப்பு வாழைச்சேனைக் கடற்பரப்பில் வைத்து அவுஸ்திரேலியாவிற்கான கடற் பயணத்தை மேற்கொள்ள எத்தனித்த நூற்றுப்பதினாறு தமிழர்கள் கைதாகியுள்ளனர்.

இவர்கள் இரண்டு மீன்பிடிப்படகுகளில் பயணத்தை மேற்கொண்டிருந்த வேளையில்ஜ"லை 31ம் நாள் அதிகாலையில் வாழைச்சேனைக் கடற்பரப்பின் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கடற்படைக் கலங்களின் சந்தேகப் பார்வைக்குட்பட்ட போதே கைதாகினர்.

மூன்று மாதக் கைக்குழந்தை யொன்றும் இம் மரணம் நோக்கிய பயணத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. கச்சான் காற்று மணிக்கு 70 கிலோமீற்றர் வேகத்தில் வீசிக் கொண்டிருக்கும் இக் காலத்தில் சட்டவிரோதக் கடற்பயணத்தை இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளை பப்புவா நியூகினியா என்னும் வறிய நாட்டில் குடியமர்த்தத் தேவையான.......

15

# கிழக்கின் அபிவிருத்திக்கு 7000 மில்லியன்கள்



(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் ஸ்மாயில்)

கிழக்கு மாகாண சபையின் நிருவாகத்தை புதிதாக பொறுப்பேற்றதன் பின்பு இங்கு வாழும் 17 லட்சம் மக்களின் அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம் மற்றும் அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் தீர்மானங்களையும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் முடிந்த வரை தீர்க்கின்ற, தீர்வு காண்கின்ற ஒரு விசேட நடவடிக்கை தற்போது நாம் மேற்கொண்டு வருகின்றோம் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக அக்கரைப்பற்று ரீ.எப்.சீ கூட்ட மண்டபத்தில் 29.7.2013ல் நடைபெற்ற அம்பாறை மாவட்டத்திற்கான விசேட கூட்டத்தில் உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களாக மாற்றுத்திறனாளிகள்

(கீத், கதிரவன்)

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவதற்காக ஏழு மாற்றுத் திறனாளிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நியமனம் வழங்கும் நிகழ்வு மாகாண ஆளுனர் ரியர் அட்மிரல் மொகான் விஜயவிக்ரமவின் தலைமையில் ஜுலை மாதம் 31ம் நாள் ஆளுனர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் ஏ.ஏ. புஸ்பகுமாரவும், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ நிசாமும் கலந்து கொண்டனர்.



## கிழக்கின் அமைச்சர்களுக்கு புதிய வாகனங்கள்

கிழக்கு மாகாண அமைச்சர்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி அமைச்சர்களுக்கு புதிதாக ஐந்து ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்யப் படவுள்ளன.

அத்துடன் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய எவரையும் மாகாண உயர் பதவிகளுக்கு நியமிப்பதில்லை என்றும் கிழக்கின் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

## மாரடைப்பால் 18 மாதக் குழந்தை மரணம்



ஒன்றரை வயதுடைய தினிதி நிமோதா என்ற குழந்தை மாரடைப்பால் மரணமான துயரச்சம்பவம் ஒன்று திருமலையில் பதிவாகியுள்ளது.

கடந்த 28ஆம் திகதி இரவு 12 மணியளவில் மூச்சுப்பேச்சற்ற நிலையை அடைந்த குழந்தையை உடனடியாக பொதுவைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதும் சிகிச்சை பலனின்றி குழந்தை அன்றைய இரவு 1 மணியளவில் உயிரிழந்துள்ளது.

விக்னேஸ்வரன், நிரோசா கயானி ஆகியோரின் இரண்டாவது குழந்தையே மாரடைப்பால் மரணமாகியுள்ளது. குழந்தையின் பிரேத பரிசோதனை பல மணித்தியாலங்கள் நீடித்ததாக விக்னேஸ்வரன் மலைமுரசிற்குத் தெரிவித்தார். குழந்தையின் மூளையின் பகுதிகள் சில மேலதிக ஆராய்ச்சிகளுக்காக கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அனுரசிறி/உதயராஜ்)

## 30 கிலோ ஜெலிக்கனைட் கைப்பற்றப்பட்டது

மீன் பிடிக்கும் நோக்குடன் மறைத்து வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்படும் சுமார் 30 கிலோ அளவிலான ஜெலிக்கனைட் குச்சிகளை குச்சவெளி காவல்துறையின் உதவியுடன் கிழக்குக் கடற்படைக் கட்டளைப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடிக்காகப் பயன்படுத்தப்படவே இவை ஒழித்து வைக்கப்பட்டிருந்தன. இழுப்பைக்குளம் மற்றும் இறக்கக்கண்டிப் பிரதேசங்களில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த இவ் ஜெலிக்கனைட் குச்சிகளுடன் 10 மீற்றர் நீள பாதுகாப்புக் கவச வடங்களும் கைப்பற்றப்பட்டதுடன் மூன்று சந்தேக நபர்களும் கைதாகியுள்ளனர்.



## 13ஐப் பற்றிப் பேசும் அருகதை த.தே.கூவிற்கு இல்லை...

### அமைச்சர் முரளிதரன்

13வது திருத்த சட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கதைப்பதற்கு அருகதை யற்றது.

நான் இச் சட்டத்தின் அவசியம் குறித்து அரசாங்கத்திடம் தெளிவு படுத்தியுள்ளேன் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

13வது திருத்த சட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் முதன் முதலில் குரல் கொடுத்தவன் நான் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் இதுவரை மின்சாரம் அற்ற பகுதிக்கான மின் விநியோகத்தினை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போரதீவுப்பற்று பிரதேசத்துக் குட்பட்ட மருங்கையடிபூவல் மற்றும் பிட்டியடித்துறை ஆகிய பகுதிகளுக்கான மின் இணைப்பானது சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

மீள் குடியேற்ற பிரதேசமான இப்பிரதேச மக்கள் கடந்த காலத்தில் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்த மின் விநியோகம் வழங்கப் பட்டுள்ளது.



இந்த மின் விநியோக திட்டத்தின் மூலம் பிரதேசத்தில் உள்ள சுமார் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையவுள்ளதாக களுவாஞ்சிக்குடி பிராந்திய மின்சாரசபை அத்தியட்சர் அனுசாந்த் தெரிவித்தார்.

## கொலைச் சந்தேகநபர் விடுதலையானார்

ஒன்றரைமாதக் குழந்தையை சயனைட் விசமூட்டிக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் கைதாகி நீதிமன்ற விசாரணைகளுக்கு உள்ளாகியிருந்த காவல்துறையைச் சேர்ந்தவர் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் குற்றம் நிருபிக்கப்படாமையால் விடுதலையாகியுள்ளார்.

மட்டக்களப்பு புன்னைச்சோலைக் கிராமத்தில் 2002ம் ஆண்டு ஜுலை மாதம் நிகழ்ந்த இக்கொலையில் பானுகன் என்ற பாலகனே கொல்லப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து அக்குழந்தையின் தாயார் சுமித்ராதேவி காவல்துறை அலுவலரான பி.இராமேஸ்வரன் என்பவரின் மீது சந்தேகங்கொண்டதாக காவல்துறைக்கு முறையிட்டிருந்தார்.

அவ் வழக்கில் தாயாரின் வாக்குமூலத்தில் எதிரியைச் சரியாக அடையாளம் கண்டுகொள்ளவில்லை, மற்றும் சயனைட் ஊட்டப்பட்ட விதம் தொடர்பான சந்தேகங்கள் இருந்ததால் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலையானார்.

## நாளொன்றுக்கு நான்கு முறைப்பாடுகள்



நாளொன்றுக்கு பத்து முறைப்பாடுகள் எமது காவல் நிலையத்திற்குக் கிடைக்குமானால் அவற்றில் நான்கு முறைப்பாடுகள் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பானவையே என காத்தான்குடி காவல்நிலையத்தின் பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி அந் நசார் வித்தியாலயத்தில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான வன்முறை களைக் குறைத்தல் என்னும் தலைப்பிலான செயலமர்வில் இக்கருத்துக்களைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். அம் முறைப்பாடுகளில் இரண்டு சிறுவர்களுக்கு எதிரானவை என்றும் அவர் தெரிவித்தார்.

பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பதற்காக சிறந்த சட்டமூலங்கள் உள்ளன அவற்றின் உதவியுடன் அவர்களுக்கு எதிரான வன்முறைகளை குறைக்க முயற்சிக்க வேண்டும் என அவர் அங்கிருந்தவர்களைக் கேட்டுக் கொண்டார்.

## கடதாசியைச் சேகரித்து காகித ஆலைக்கு வழங்குங்கள் - மட்டு- மாவட்ட அதிபர்

கழிவுக் கடதாசிகளை எறியாமல் அவற்றைச் சேகரித்து காகித ஆலைக்கு வழங்குமாறு அரச திணைக்களங்களுக்குச் சுற்றுநிருபம் மூலம் மட்டக்களப்பு மாவட்ட அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் காகித ஆலை தொழிற்படத் தொடங்கியுள்ளதால் அங்கிருந்தே தேவையான காகிதாதிகளை அரச நிறுவனங்கள் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டும் எனவும் தனது கடிதம் ஊடாக அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கழிவாகும் அலுவலகக் கடதாசிகளைச் சேகரித்து ஆலைக்கு அறியத்தரும் பட்சத்தில் அவர்களே வந்து கழிவுக் காகிதங்களை எடுத்துச் செல்வார்கள் எனத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "இறக்குமதி செய்யப்படும் பால்மாவைத் தடை செய்யுங்கள்"

**அரச வைத்தியர் சங்கம்**

இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் "டைசயனமைட்" என்னும் நச்சுப் பொருள் கலந்திருப்பதாக ஆராய்ச்சிகள் தெரியப்படுத்தியுள்ளதைச் சுகாதார அமைச்சிற்கு அறிவித்தும் அப் பால்மா வகைகளின் இறக்குமதியைத் தடைசெய்ய இன்னும் சுகாதார அமைச்சு முன்வரவில்லை என அரச வைத்தியர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அரச வைத்தியர் சங்க உதவிச் செயலாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன மேலும் தெரிவிக்கும் போது தொழிற்றுறை தொழில்நுட்ப நிறுவனம் இறக்குமதி செய்யப்படட மாவகைகளின் மீது மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் போது அவை அனைத்திலும் டைசயனமைட் நச்சுப்பொருள் கலந்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது ஆனால் அவ்வறிக்கையினைப் பெற்றுக் கொண்ட சுகாதார அமைப்புக்கள் அவ்வறிக்கையின் மீது எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ள வில்லை எனக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரச வைத்தியர் சங்கச் செயலாளர் வைத்தியர் நவீன் டீ சொய்சா தெரிவிக்கும் போது அப்பால்மா வகைகளை இறக்குமதி செய்வதை உடனடியாக தடுக்குமாறு சுகாதார அமைச்சைக் கேட்டுக் கொள்வதுடன் அப் பால்மாவைத் தயாரித்தளிக்கும் பல்தேசியக் கம்பனிகள் இலங்கை நுகர்வோருக்கும், குழந்தைகளுக்கும் நட்டஈட்டை வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

வைத்தியர் ஆரியரத்ன தெரிவிக்கும் போது டைசயனமைட் சிறுநீரக நோய்களையும், நரம்பு வருத்தங்களையும், சுவாசக்குழல் பிரச்சனைகளையும் ஏற்படுத்த வல்லது எனத் தெரிவித்தார்.

எனினும் சுகாதார அமைச்சிலுள்ள யார் இறக்குமதிப் பால்மாக்கள் நுகர்வுக்கு உகந்தவை என பரிசோதனைக் கூட அறிக்கைகள் தெரிவித்துள்ளன என்ற அறிக்கையை ஊடகங்களுக்கு வழங்கினார் என்பதைக் கண்டு பிடிப்பதற்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தற்போது குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் உதவியை நாடியுள்ளனர்.

## திடீர் நெஞ்சுவலிக்கு மட்டக்களப்பில் இலவச அம்புலன்ஸ் சேவை அறிமுகம்

மாரடைப்பால் வரும் நெஞ்சுவலி திடீரென ஏற்படுமிடத்து தேவையேற்படின் வீட்டில் இருந்த வண்ணம் அம்புலன்ஸ் வண்டி மூலம் முதலுதவி வசதிகளுடன் இலவசமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அழைத்து செல்வதற்கான ஒழுங்குகள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திடீர் நெஞ்சு வலி ஏற்படுமிடத்து உடனடியாக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் 0652229154 என அறிவிக்கப்பட்டுள்ளது

## பொது மக்களைப் பாதுகாக்க அரசு தவறியுள்ளது – அமெரிக்கா கண்டுபிடிப்பு

அமெரிக்க அறிக்கையொன்று வன்னியில் இறுதிப் போர் நடந்த போது இலங்கை அரசாங்கத்தினதும் சர்வதேசங்களினதும் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்துள்ளது. இவ்வாவணத்தை அமெரிக்க முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமடலின் அல்பிறைட், சூடானுக்கான அமெரிக்க சனாதிபதியின் முன்னாள் தூதுவர் றிச்சட் வில்லியம்ஸ் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ளனர்.

## சாய்ந்தமருது பீச் பார்க் வேலைகளை தொடர நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது

கல்முனை மாநகர சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற சாய்ந்தமருது பீச்பார்க் அபிவிருத்தி வேலைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியுமென கல்முனை நீதவான் நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பீச் பார்க் கட்டுமானத்திற்கு காவல்துறையினர் எந்தவித தடைகளையும் விதிக்கக் கூடாது எனவும் காவல்துறை தடைகளை விதிக்கும் பட்சத்தில் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்துமாறும் கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# மக்கள் முரசு



பாலையூற்றுப் பகுதியில் அடிக்கடி தங்கச் சங்கிலி திருட்டு இடம் பெறுவதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

அநேகமாக மக்கள் நடமாட்டமில்லாத வீதிகளில் தனியாக வரும் பெண்களிடமிருந்தே இவை அபகரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வருட ஆரம்பத்தில் இவ்வாறான திருட்டு தொடர்பாக காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்த வேளையில் இந்த நடவடிக்கைகள் சற்று குறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீதிக்குக் கொங்கிறீட்.... வீட்டுக்குள் வெள்ளம்

"கமநெகும" கருத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் அநேக கிராமங்களில் பழைய வீதிகள் கொன்கிரீட் வீதிகளாக மாறின.

அவ்வீதிகள் போக்குவரத்திற்கு சௌகரியத்தைக் கொடுத்தாலும், குறித்த வீதிகளின் இரு மருங்கிலும் வடிகால்கள் அமைக்கப்படாததால் மழைகாலங்களில் நீர் பாய்ந்தோட முடியாமல் பல காணிகளுக்குள் நீர் தேங்கி நிற்பதாலும் ஒருவரின் காணிக்குள் இன்னொருவரின் காணியின் நீர் பாய்ந்து செல்வதாலும் மக்கள் மத்தியில் புதிய பிரச்சனை உருவாகியுள்ளது.

துப்பரவில்லாத பகுதிகளின் மழைநீர் அசுத்தத்துடன் துப்பரவான பகுதிகளூடாக குறுக்கறுத்து ஓடுவதால் இங்கு சுகாதாரப் பாதிப்புகளும் இடம் பெறுகின்றன. (பாலையூற்றான்)

## "சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலய மாணவி சாதனை"



தி/ சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயத்தில் 2013 கலைப்பிரிவில் கற்கும் செல்வி. சேதுபாண்டி ரதிதேவி நடைபெற்று முடிந்த அகில இலங்கை தமிழ்தின போட்டியில் "தமிழியல் கட்டுரை வரைதலும் இலக்கிய நயத்தலும்" எனும் போட்டியில் தேசிய மட்டத்தில் 3ம் இடத்தை பெற்று வரலாற்றுச்சாதனை பெற்றுள்ளார் இவர் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணப் போட்டியில் 1ம் இடத்தை பெற்று தேசியமட்டத்தில் வெற்றிபெற்றார்.

இவரது இச்சாதனை வித்தியாலயத்திற்கும் வழிகாட்டிய ஆசிரியர், அதிபரிற்கும், வலயம் மாகாணத்திற்கும், பெருமையை ஈட்டித்தந்துள்ளது.

குறிப்பாக கிழக்குமாகாண கல்வித்திணைக்கள தமிழ் பிரிவின் இணைப்பாளர் திரு.மு.விக்னராஜா அவர்களும், மாகாண தமிழ் பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.சிவநிர்த்தானந்தா அவர்களும், வலயக்கல்வித் திணைக்கள ஆசிரிய ஆலோசகர் திருமதி.இமாசலாதேவி ரகுந்தரராஜா அவர்களும் மிகுந்த கரிசனையுடன் இம்மாணவியை நெறிப்படுத்தினார்கள், மேலாக திரு.மு.விக்னராஜா அவர்கள் சிறப்பாக உதவி செய்து, வழிப்படுத்தினார் என அப்பாடசாலையின் அதிபர் ரி.விஜயராஜேந்திரன் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் கைதான இந்திய மீனவர்கள்

முல்லைத்தீவுக் கடலில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களை கிழக்குக் கடற்படைக் கட்டளைப் பீடப்படையினர் கைது செய்து திருமலை இறங்குதுறைக்குக் கொண்டு வந்துள்ளனர். பின்னர் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. 4 றோலர் படகுகளும் 31 மீனவர்களும் கைதாகியுள்ளனர்.

(கதிரவன்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித்தாவலில் நாகரீகம்

எம்.எஸ்.எம் ஐயூப்

பல ஆண்டுகளாக சரிவுக்கு மேல் சரிவுகளை எதிர்நோக்கி வந்த ஐக்கிய தேசிய கட்சிக்கு குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அரசாங்கத்திற்குத் தாவியதை அடுத்து மற்றொரு அடி விழுந்துள்ளது. ஜயசேகர ஐ.தே.க.வின் முன்னணி பிரசாரகாரர்களில் ஒருவர் என்பதால் அவரது கட்சித் தாவல் ஐ.தே.க.வை வெகுவாக பாதிக்கும என்பதில் சந்தேகமே இல்லை.

பொதுவாக ஐ.தே.க.வின் சரிவு இரண்டு விதத்தில் நாட்டை பாதிக்கின்றது. எந்தவொரு நாட்டிலும் பலமானதோர் எதிர்க் கட்சி இருப்பது ஜனநாயகத்திற்கு உகந்த நிலைமை யாகும். 18ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் 13அவது அரசியலமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்வதற்கான முயற்சிகள் போன்றவை பலமான எதிர்க் கட்சியொன்று நாட்டில் இல்லாமையின் நேரடி விளைவாகும்.

மறுபுறத்தில் ஐ.தே.க. ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை விட குறைந்த இனவாதத்தைக் கொண்ட கட்சியாகவே இப்போதைக்கு இருக்கிறது. வரலாற்றில் ஒருகாலத்தில்,அதாவது 2000ஆவது ஆண்டுக்கு முன்னர் இரண்டு கட்சிகளும் ஏட்டிக்கு போட்டியாக இனவாதத்தை தூண்டி வந்த போதிலும் அண்மைக் காலங்களில் ஐ.தே.க.விடம் குறைந்த இனவாதமே காணக் கூடியதாக இருந்தது.

தேர்தல் நடைபெறவிருக்கும் மூன்று மாகாணங்களில் வட மாகாண சபைத் தேர்தல் மட்டுமே அரசியல் துறையிலும் ஊடகங்களிலும் இது வரை பேசப்பட்டு வந்தது. ஜயசேகரவின் கட்சித் தாவல் காரணமாக அவர் போட்டியிடுவதாகக் கூறப்படும் வடமேல் மாகாண சபைத் தேர்தலும் இப்போது பேசப்படும் நிலைக்கு வந்துள்ளது.

ஒருவருக்கு அரசியல் காரணங்களினாலோ அல்லது தனிப்பட்ட காரணங்களினாலொ ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு மாறுவதற்கு உரிமை இருக்கிறது. ஜயசேகரவுக்கும் அந்த உரிமை இருக்கிறது. அதேபோல் கருணா எனறழைக்கப்பட்ட அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் கே.பி என்றழைக்கப்பட்ட செல்வராசா பத்மநாதனுக்கும் அந்த உரிமை இருக்கிறது. இதனால் எந்தக் கட்சி பயன் பெறப் பேகிறது என்பது நடுநிலையாக நோக்கும் ஒருவருக்குப் பிரச்சினையல்ல.

ஆனால் அவ்வாறான கட்சித் தாவல்கள் நாட்டின் ஒட்டுமொத்த ஜனநாயகத்தை பாதிப்பதாயின் அதுவும் கட்சித் தாவியவர்கள் முன்னர் கூறிய அனைத்தையும் மாற்றிக் கூறி மக்களை வழிநடத்த வருவதுமே பாரதூரமான விடயங்களாகும்.

ஜயசேகரவை பொறுத்தவறை அவர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வைத்துக் கொண்டே கட்சி மாறவில்லை.

அவ்வாறு செய்திருந்தால் அவர் கடந்த பொதுத் தேர்தலின் போது தமக்கு வாக்களித்த ஐ.தே.க. வாக்காளர்களின் எதிர்ப்பார்ப்புக்கு மாறாக செயற்படுவதாக குற்றஞ் சாட்டப்படலாம். அனால் அவர் எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்வதாக அறிவித்து விட்டே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் சேர்ந்து கொண்டார்.

இருந்த போதிலும் இது வரை அவர் மக்களுக்கு கூறி வந்தவற்றை இனி மாற்றிக் கூறப் போகிறார். இது வரை காலமும் அவர் மாகாண சபை முறையை ரத்துச் செய்யக் கூடாது என்றும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் மாற்றம் கொண்டு வந்து மாகாண சபைகளின் அதிகாரங்களை குறைக்கக் கூடாது என்றும் கூறி வந்தார். இப்போது அவர் ஆளும் கூட்டணியில் சேர்ந்து இருப்பதால் இனி அவரும் மாகாண சபை முறையை ரத்துச் செய்ய வேண்டும் என்று அல்லது மாகாண சபைகளின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்று கூறுவார் என்றே யூகிக்க வேண்டியுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ரத்துச் செய்ய வேண்டும் என கடந்த செவ்வாய்க்கிழமை வரை கூறிய அவர் இனி அம் முறை நீடிக்க வேண்டும் என்று மட்டுமல்லாது இரண்டு முறைக்கு மேல் ஒருவர் நிறைவேற்று ஜனாதிபதியாக பதவி வகிப்பதும் சரியே என வாதாடப் போகிறார்.

இந்திய தலையீட்டுக்கு அரசாங்கத்தின் தவறான கொள்கைகளே காரணம் என்று கூறிய அவர் இனி இலங்கை விடயத்தில் தலையிடுவதாகக் கூறி இந்தியாவை சாடப் போகிறார். அதற்காக இந்தியாவை தூண்டுவதாக இலங்கையில் தமிழ் கட்சிகளையும் திட்டப் போகிறார்.

வடக்கில் இராணுவ பிரசன்னம் அதிகமாக இருக்கிறதென்ற ஐ.தே.க.வின் வாதத்தை ஏற்று இது வரை வாதாடிய அவர் இனி அங்கு அவ்வாறான பிரச்சினையே இல்லை என கூறப் போகிறார்.

ஒருவர் ஒரு சித்தாந்தத்தை அல்லது ஒரு கொள்கையை அல்லது ஒரு கட்சியை பின்பற்றிக் கொண்டு இருக்கும் போது அக் கொள்கை அல்லது அச் சித்தாந்தம் அல்லது கட்சி பிழையானது என பின்னர தமது அறிவின் பிரகாரம் உணரலாம். அப்போது அதனை கைவிடுவது நியாயமே. ஆனால் அரசியலில் அனேகமாக நடப்பது அதுவல்ல. தமது சொந்த நலன், பாதுகாப்பு, சொத்தாசை போன்றவற்றினாலேயே பலர் தாம் இருந்த அரசியல் இயக்கங்களை கைவிடுகின்றனர்.

ஜயசேகர ஐ.தே.க.வில் தமக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று அதில் இருந்து விலகினார். அவர் அக் கட்சியின் எந்தவொரு கொள்கையும் பிழையென இது வரை கூறவில்லை. ஆனால் தமக்கு ஐ.தே.க.வில் உரிய அங்கீகாரம் கிடைக்காததற்காக அதிலிருந்து விலகிய அவர் இனி அக் கட்சியின் கொள்கைகளை விமர்சிக்கப் போகிறார். இது என்ன நாகரிகம்?

கே.பி. பிரபாகரனின் மரணத்தை அடுத்து புலிகளின் தலைமை பதவியை ஏற்றிருந்த நிலையிலேயே மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டார் அப்போது அவர் புலிகளின் எந்தவொரு கொள்கையையும் நடவடிக்கையையும் மாற்ற வேண்டும் என்ற நிலையில் இருக்கவில்லை. கைது தான் அவரது கொள்கையை மாற்றியது. இது உயிர் பாதுகாப்புக்காக மேற்கொண்ட கொள்கை மாற்றம் என்று கூற முடியாதா?

அவ்வாறு ஒருவர் கொள்கையை மாற்றிக் கொண்டாலும் பிரச்சினை இல்லை. அது அவரது தனிப்பட்ட பிரச்சினை. ஆனால் அதனை மக்களுக்கு போதிப்பதில் தான் பிரச்சினை எழுகிறது.

ஈ.பி.ஆர.எல்.எப். டெலோ மற்றம் புளோட் போன்ற அமைப்புக்கள் இந்திய நிலைப்பாட்டின் காரணமாக தமிழ் ஈழம் சாத்தியமில்லை என்று உணர்ந்தே அக் கொள்கையை கைவிட்டன. அது கூட்டாக மேற்கொண்ட அரசியல் தீர்மானமாகும். அதற்கும் தனிப்பட்ட நலன்களுக்காக கொள்கைகளை மாற்றிக் கொள்வதற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது.

2008ஆம் ஆண்டு தம்மை விலக்க மக்கள் விடுதலை முன்னணி முடிவு செய்ததை அறிந்த விமல் வீரவன்ச "எனது கட்சி ஏன் என்னை சுட்டுத் தள்ளியது" என்றே நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது கேட்டார். அதாவது அவர் அப்போதும் மக்கள் விடுதலை முன்னிணியின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தார் என்றே அர்த்தமாகிறது. அவ்வாறாயின் அக் கட்சியில் இருந்து வெளியேறிய உடன் அவர் சோஷலிஸத்தை ஏன் கைவிட வேண்டும்?
இது சித்தாந்த ரீதியாக சிந்தித்து சோஷலிஸக் கொள்கை பிழையென உணர்ந்ததன் விளைவல்ல. சோஷலிஸக் கொள்கை பிழையென்றோ அல்லது தற்போதைய உலக சூழலில் அது சாத்தியமில்லை என்றோ உணர்ந்து ஒருவர் அக்கட்சிலிருந்து விலகுவதைப் போல் இது நாகரிகமான செயலல்ல.

ஆனால் தமது கட்சியின் அல்லது இயக்கத்தின் வெற்றிக்காக எதைச் செய்தாலும் பரவாயில்லை என்ற நிலையான கொள்கையொன்றை சகல கட்சிகளும் பின்பற்றும் நிலையில் கட்சித் தாவல்களில் இருக்கும் இந்த அநாகரிகத் தன்மையை எவரும் பொருட்படுத்து வதில்லை.

(நன்றி : தமிழ்மிரர்)

# பிரதான வேட்பாளராகத் தேர்வான மறுநாள் லண்டன் வெப் தளமொன்றுக்கு விக்னேஸ்வரன் அவர்கள் வழங்கிய செவ்வி



2011ன் இறுதியில் கொழும்பிலிருந்து வெளியாகும் டெயிலி மிரர் பத்திரிகையில் உங்களது நேர்காணல் பிரசுரமாகியிருந்தது. அப்போது நீங்கள் வெளியிட்டிருக்கும் கருத்துக்களிலிருந்து இப்போதும் மாறாது இருக்கிறீர்களா?
: அந்த நேர்காணலில் என்ன கூறியிருந்தேன் என்பது இப்போது ஞாபகத்தில் இல்லை. எந்தக்கருத்து என்று கூறுவீர்களா?
கே: குறித்த நேர்காணலில் தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வாக சம்ஸ்டி முறையை நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.
:ஒருகல்வியாளராக, வெளியிலிருந்து கருத்துக் கூறுபவராக அவ்வாறு கூறியிருந்தேன். ஆனால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரு தீர்வினை மனதில் வைத்துக் கொண்டு செயற்படமுடியாது. தமிழ் மக்களுடைய நல்வாழ்வும் அவர்களது நலனும் தான் இப்போது என்னிடமுள்ள ஒரேயொரு சிந்தனையாக உள்ளது.
கே: ஏற்கனவே மாகாணசபை முதலமைச்சர் பதவியினை வகித்த இரண்டு தமிழர்கள் தங்களால் அப்பதவியின் மூலம் எதனையும் செய்ய முடியாதிருந்தது என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்நிலையில், நீங்கள் எதனைச் சாதிக்க விழைகிறீர்கள்?
: உண்மைதான் இதில் பிரச்சனை இருக்கிறது என்பது நன்றாகத்தெரிகிறது. ஓரளவுக்கு சட்டம் தெரிந்தவன் என்ற வகையில், பதின்மூன்றாம் திருத்தச் சட்ட மூலத்தில் உள்ள பிரச்சனைகள் எல்லாம் எனக்கு நன்றாக விளங்குகிறது. அதாவது ஆளுனருடைய அனுமதியைப் பெறாமல் எதுவுமே செய்ய முடியாத நிலையிருப்பதால். எங்களுக்கு வலது கரத்தால் தரப்பட்டதை இடதுகரத்தால் பெற பட்ட மாதிரியான நிலையிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சூழலில் எதனை சாதிக்க முடியும் என்றுகேட்கிறீர்கள். சாதிக்க முடியுமோ சாதிக்க முடியாதோ. முதலில் நாங்கள் சாதிப்பது. மக்களுடைய ஆணையை நாங்கள பெறுகின்றோம்.

அதாவது ஜனநாயக முறைப்படி ஒருவரை தேரந்தெடுக்கும் போது மக்களுடைய எண்ணத்தின் பிரதி பலிப்பாகவே அது இருக்கிறது. அந்த பிரதிபலிப்பின் அடிப்படையிலே நாங்கள் எங்களுக்கு தரப்பட்டிருக்கும் (13ம் திருத்தச்) சட்டத்தில் உள்ள பிரச்சனைகளை எடுத்துக் கூறவேண்டும். அரசாங்கத்திடமும் எடுத்துக் கூறவேண்டும். சர்வதேச மட்டத்திலும் இதனைக் குறிப்பிடவேண்டும். ஆக இப்படித்தான் இருக்க வேண்டும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று கூறமுடியாது. மக்களுக்கு நன்மை ஏற்படும் விதத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு நகர வேண்டும். எது வரும் எப்படி நாங்கள் செய்யப் போகிறோம் என்பதனை இப்போது என்னால் கூறமுடியாதுள்ள ஒரு நிலையில் நானிருக்கிறேன்.
கே: தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒரு வேட்பாளராக போட்டியிடுகிறீர்கள். நீங்கள் தமிழரசுக்கட்சியிலோ அல்லது கூட்டமைப்பில் உள்ள மற்றய கட்சிகளில் ஒன்றில் இணைந் துள்ளீர்களா?
: கூட்டமைப்பில் உள்ள கட்சிகளின் முழுமையான ஆதரவு எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை என்னிடமுள்ளது. இதில் நாங்கள் வேற்றுமை பாராட்ட வேண்டிய அவசியம் எதுவுமில்லை. நான் யதார்த்தமாகப் பார்க்கும் ஒரு விடயத்தை மற்றவர்கள் வேறு விதமாகப் பார்த்தால் எமக்கிடையே விவாதம் நடைபெறும். அது நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கும்.
கே: அவ்வாறானால் நீங்கள் ஒரு அரசியல் கட்சியிலும் இணையவில்லை?
: இல்லை. நான் எந்தக் கட்சியிலும் இணையவில்லை. என்னைப் பொறுத்தவரையில், வடமாகாணத்தில் இருக்கும் பாதிக் கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்த மாகாண சபையினால் எதைச் செய்யமுடியும் என்று ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பது தான் எனது பணியாக இருக்கும். நான் தமிழ் மக்களின் கருவியாகத்தான் கடமையாற்றப் போகிறேனே ஒழிய எந்தக் கட்சியின் கருவியாகவும் நான் கடமையாற்றப் போவதில்லை.
கே : நீங்கள் ஆயதப்போராட்டத்திற்கு எதிரான கருத்துடையவர், அகிம்சை வழியிலான போராட்டங்களை வலியுறுத்துபவர் என்ற வகையில், நீங்கள் பதவிக்கு வந்தால், மக்களைஅணிதிரட்டி அமைதி வழியிலான போராட்டங்களை முன்னெடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கலாமா?
: இப்போது என்னால் கூறமுடியாது. ஆனால் சில நேரத்தில் எல்லாமே எங்களுக்கு சார்பில்லாமல் நடக்கும்போது, அப்பதவியில் இருந்து பிரயோசனமில்லை. ஆகவே அப்பதவியில் தொடரந்து இருக்க வேண்டும் என்றால் மக்களை அணிதிரட்டி நாங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் கட்டாயம் ஏற்படும். அந்த நேரத்தில் எப்பேர்ப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கப்போகிறோம் என்பதனை அப்போதுதான் கூறமுடியும். இப்போது அதுபற்றிக் கூறமுடியாத நிலையில் தான் நானிருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமுரசு

# மாவட்டங்களுக்குள் அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்

- அமைச்சர் தினேஷ் குணவர்தன -

மாகாணசபைகள் வெற்றியளிக்காத தன்மையின் யதார்த்தம் எம் அனைவருக்கும் தெளிவாகியுள்ளமையால் அவைகளை ரத்துச் செய்து மாவட்டங்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென மஹஜன ஐக்கிய முன்னணியின் தலைவரும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

கடந்தவாரம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மாகாண சபைகளினால் பாராளுமன்றத்தின் அதியுயர் நிலைக்கு பங்கம் ஏற்பட்டுள்ள விதத்தினை தெளிவுபடுத்தினார்.

எமது நாட்டிலுள்ள குறுகிய எண்ணங்கொண்ட அரசியல்வாதிகளும், தத்துவாசிரியர்களும், 13வது அரசியலமைப்பை பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதுடன், அது இந்த நாட்டுமக்களின் எதிர்பார்ப்பல்ல என்று கூறினார்.

எமது நாட்டின் நிர்வாக முறைமைகள், நிதியை செலவு செய்யும் விடயங்கள் ஆகியன இடம்பெறுவது மாவட்ட அபிவிருத்தி குழுவின் ஊடாக என்பதால் அரசியல், நிர்வாகம், ஆகிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது மாவட்டங்களுக்கே என அவர் மேலும் சுட்டிக்கட்டினார்.

மக்கள் விடுதலை முன்னணி தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளதுடன் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் வெளிநாட்டுக்குச்சென்று நாம் இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையென குற்றம் சாட்டுகின்றார் என்றார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் உதவியை நாடாது நாட்டின் பிரச்சனையை உள்ளக ரீதியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டால் நல்லதெனக் கூறிய அவர், இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள விடயங்களை கவனத்தில் கொண்டு இப்பிரச்சனைகளை எமக்கு ஏற்புடையவகையில் தீர்த்து எதிர்கால சந்ததியினரின் நன்மைக்காக நாளைய தினத்தினை மலரவைப்போம் எனவும் கேட்டுக் கொண்டார்.

(மரியதாஸ்)

## இந்தியா எமது தமிழ் மக்களின் இரட்சகர்கள் அல்ல!

— சோமவங்ச அமரசிங்க —

வடக்கு மாகாணசபை தேர்தலை முன்னிட்டு வவுனியாவில் இடம் பெற்ற கூட்ட மொன்றில் "இந்தியா எமது தமிழ் மக்களின் இரட்சகர்கள் அல்ல " என சோமவங்ச கூறியுள்ளார்.

மேலும் "இந்திய மீனவர்கள் அதிசத்தி வாய்ந்த ரோலர் மீன்பிடி படகுகளில் எல்லைமீறி எமது கடற்பரப்பிற்குள் நுழைந்து எமது மக்களின் தேசிய வருமான மீன்களை அள்ளிச் செல்கின்றனர். ஆனால் இங்கு போட்டி போடும் எந்தவொரு கட்சியும் இவ் அத்துமீறலைப்பற்றிக் குரல் கொடுத்தோ, போராட்டமோ, நடத்தவில்லை.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணி மாத்திரமே இவ்விடயம் தொடர்பாக தமது எதிர்பை தெரிவித்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

(மரியதாஸ்)

# புதிய சுனாமிக்குள் கோணேசபுரி

திருகோணமலை கோணேசபுரி என்ற கிராமம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களிற்கென பல நிறுவனங்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட நூற்றுக் கணக்கான வீடுகளைத் தன்னகத்தே கொண்ட ஓர் வீட்டுத்திட்டமாகும்.

ஏறக்குறைய நானூறு வீடுகளைக் கொண்ட இக்கிராமத்தின் கிராமசேவையாளர் அண்மையில் தாக்குதலுக்கு உள்ளானதைத் தொடர்ந்து அக்கிராமத்தின் அவலநிலைகள் சில வெளிவரத் தொடங்கின.

மலைமுரசின் பயிற்சிச் செய்தியாளர்கள் அங்கிருந்து தரும் உண்மை நிலைமைகள் இதோ:



கைவிடப்பட்ட வீடு - குற்றச்செயல்களுக்கான மறைவிடம்

திருகோணமலை நகரிலிருந்து நிலாவெளி நோக்கிச் செல்லும் பிரதான வீதியிலிருந்து கிழக்குப் பல்கலைக் கழகத்திறகுச் செல்வதற்காக கோணேசபுரியின் உடைந்தழிந்து கொண்டிருக்கும் வீதி வலப்பக்கமாகத் திரும்புகின்றது. இவ் வீதியின் வலப்பக்கத்தில் இவ்வீட்டுத்திட்டம் மலையின் மீதும் பற்றைக் காடுகளுக்கு இடையேயும் அமைக்கப்பட்டுள்ளது.

சில நிறுவனங்களால் கட்டிக் கொடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இக் கிராமம் பல்வேறுபட்ட பிரச்சனைகளினதும் சட்டவிரோத நடவடிக்கைகளினதும் பிரதேசமாக மாறியுள்ளது.

மேற்படி கிராமமானது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்காக 2005ம் ஆண்டு KPMG, சனச வங்கி ICRC போன்ற பல நிறுவனங்களினால் 397 வீடுகளுடன் நிர்மாணிக்கப் பட்டதாகும்.

இவ் வீடுகளுக்கு உறுதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை அண்மையில் மேற்கொண்டபோது குறித்த வீடுகளில் 192 வீடுகள் வாடகைக்கு விடப்பட்டிருப்பதுடன் 14 வீடுகள் விற்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து வீடுகளில் அதன் உரிமையாளர்கள் இருக்க வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாதபட்சத்தில் உறுதி வழங்கப்பட மாட்டாது எனவும் பிரதேசசெயலகத்தால் தீர்மானம் செய்யப்பட்டது.

11.06.2013 அன்று இத் தீர்மானம் தொடர்பான முதலாவது அறிவித்தல் அப்பகுதிக்குரிய கிராமசேவகரால் வழங்கப்பட்டுள்ளது.



கோணேசபுரி மற்றும் திருமலை வளாகத்திற்குச் செல்லும் பிரதான தெருவின் நிலை

அவ்வறிவுறுத்தலின் படி வாடகைக்குடியிருப்பாளர்கள் 60க்கு மேற்பட்டவர்கள் அக்கிராமத்திலிருந்து வெளியேறியிருந்தனர். எனினும் மேலும் பலர் தாம் வீடுகளை விட்டு அகலமாட்டோம் எனத் தெரிவித்தனர்.

குறித்த மக்களிடம் கதைப்பதற்காக கிராமசேவகர் சென்றபோது, அவர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார். எனினும் இச்சம்பவம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப் பட்டிருக் கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இத்தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிராமசேவகருக்கு ஆதரவாக சுமார் 80 பேர்கொண்ட குழுவினரால் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசச் செயலகத்திற்கு முன்பாக ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து வாடகைக்கு அமர்த்தப்பட்டிருப்பவர்கள் 45 நாட்களுக்குள் வெளியேற வேண்டுமெனவும் அவ்வாறு வெளியேறாத விடத்து கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் 2வது அறிவித்தல் 11ம் மற்றும் 13.07.2013ம் தினங்களில் இரு தடவைகள் விடுக்கப்பட்டது.

இவ்வாறிருக்க இப்பிரச்சனைகள் தொடர்பில் செய்தியைப் பெறச்சென்ற மலைமுரசின் செய்தியாளரிடம் அப்பிரதேசவாசிகள் தமது இடர்களை முறைப்பாடு செய்தனர்.

இங்கு மலையை அண்டிய காட்டுப்புறத்தில் KPMGநிறுவனத்தால் கட்டப்பட்ட 20 வீடுகளுக்கும் நீர் மற்றும் மின்சாரவசதிகள் அன்றிலிருந்தே வழங்கப்படவில்லை.

இதனால் அவ்வீட்டுவாசிகள் நீரிற்கு மைல் கணக்கில் நடக்க வேண்டியிருப்பதாகவும் அத்துடன் பல அசௌகரியங்களை சந்திக்கும் அதேவேளை இப்பிரதேசத்தை சூழ காடுகளாக இருப்பதால் யானை பன்றி முதலான காட்டுவிலங்குகளால் ஆபத்துக்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அவ் இருபது வீடுகளில் ஒன்றில் வசிக்கும் சண்முகநாதன் எனும் முதியவர் தெரிவிக்கையில் தான் 2006 ம் ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து இங்கு வசிப்பதாகவும் இப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள வீடுகளில் சமூக விரோதிகள் சிலரால் போதைப் பொருட்பாவனை, விபச்சாரம் என்பன மேற்கொள்ளப்படுவதாகவும் இதனால் தாம் பல பிச்சனைகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தார். இப்பகுதியில் வீடுகளினதும் உட்கட்டமைப்பு வசதிகள் ஒழுங்கற்ற நிலையில் இருப்பதோடு பாதைகளும் பாவனைக்கு உரியநிலையில் இல்லை என்பதும் பிரதேசவாசிகளின் முறைப்பாடாக உள்ளது.



ஐயா சண்முகநாதன்

இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டது என்பதால் எவருக்குமே அதன் பெறுமதி தெரியவில்லை. (ரூபசிறி/உதயராஜ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லிவிட்டு, அப்பா பிறகு கதைப்பம்.. நான் ஸ்கூலுக்குப் போயிற்று இப்போ வந்திடுவன் என்று சொல்லி விட்டு ரேகாவுடன் சென்றான். சொல்லு ரேகா! என்ன விடயம்? ஜீவா உன்னிடம் இந்தக் கடிதத்தை மினி கொடுக்கச் சொன்னாள் என்று கடிதத்தை நீட்டினாள். கடிதத்தை வாங்கி வாசித்த ஜீவாவுக்கு அதிர்ச்சியாகவும், சந்தோசமாகவும் இருந்தது. காரணம் மினி தன்னை விரும்புவது அவனுக்கு இப்போதுதான் தெரிந்தது.

ஜீவாவும் மினி மீது உயிரான காதலை வைத்திருந்தான். ஆனால் மினியின் அமைதியும், அடக்கமும், குடும்ப சூழ்நிலையும் அவனை அவளிடத்திலிருந்து விலக்கியே வைத்தது. இதனால் தன் காதலை ஏற்றுக் கொள்ளமாட்டாள் என்று தன் காதலை தனக்குள்ளே மறைத்து வைத்திருந்தான் ஜீவா.

ஜீவாவுக்கு மினியும் தன்னை விரும்புகிறாள் என்ற அளவு கடந்த சந்தோசத்தினால் கண்கள் கலங்கின. ரேகா! மினி இப்போ எங்கே? என ஆர்வத்துடனும், ஆசையுடனும் கேட்டான் ஜீவா.

மினி கொஸ்ரல் போவதற்காக ரெடியாகின்றாள் என்றதும்.. இல்லை ரேகா, எனக்கு மினியை உடனே பார்க்கணும்.. மினியை கூட்டி வருவாயா? என்றான் ஜீவா கெஞ்சலாக. அவளும் ஓகே என்று சொல்லி விட்டு அவளைக் கூட்டி வருவதற்காக மினியின் வீட்டுக்குச் சென்றாள்.

மினியிடம் சென்று.. ஜீவா உன்னுடன் கதைக்க வேணுமாம் உடனே என்னுடன் வா.. என்று ரேகா கூப்பிட்டதும் முதலில் மறுத்த மினி ஜீவாவை ஒரு தரம் பார்க்கலாம் என்பதற்காக ஒத்துக் கொண்டாள். ஜீவா மினியின் வரவுக்காக காத்திருந்தான். மினி ஸ்கூலுக்குள் நுழைந்ததும் ஜீவா ஓடி வந்தான். இருவரின் உணர்களையும் புரிந்து கொண்ட ரேகா விலகிக் கொண்டாள்.

மினி முதலில் என்னை மன்னித்து விடு. இத்தனை வருடமாய் உன் காதலை என்னிடம் மறைத்து விட்டாயே... உன்

கடந்த வாரத் தொடர்ச்சி..

# உண்மைக் காதல்... (2)

-மிதிலா ஜெயமோகன்-

அன்பை இத்தனை வருடமாய் இழந்து விட்டேனே.... நீ என்னை விரும்புகிறாய் என்பது எனக்கு இப்போதுதான் தெரியும்.

உன்னை எனக்கு எவ்வளவு பிடிக்கும் தெரியுமா? மினி.. சொல்ல அளவே இல்லை. உன்னை விட்டுப் பிரிந்து மட்டக்களப்பிற்குப் படிக்க வந்த ஒவ்வொரு நாளும் எப்படியெல்லாம் தவித்தேன் தெரியுமா? மினி.. நீ என் காதலை ஏற்றுக் கொள்ள மாட்டாயோ? என்று சந்தேகத்தில்தான் என் அன்பை உன்னிடம் காட்டிக் கொள்ளாமல் உன்னை விட்டு விலகியே இருந்தேன்.

அன்று ஏசியது கூட என் காதலை நீ புரிந்து கொள்ளவில்லையே என்ற கோபத்தினாலே தவிர உன்னை மனதார திட்டவில்லை மினி. என்னை மன்னித்து விடு. நான் என் காதலைக் கூறி ஒரு வேளை நீ மறுத்திருந்தால்.... ஐயோ! நான் உயிருடனேயே இருந்திருக்க மாட்டன். அதனால்தான் உன்னை என் மனதிலே வைத்து காதலித்துக் கொண்டே இருந்தேன். ஐ லவ் யூ மினி.... ஐ லவ் யூ சோ மச்.. எனக் கண்ணீர் மல்க கூறி முடித்தான் ஜீவா.



மினிக்கு வார்த்தைகள் வரவில்லை. கண்ணீர் பெருகியது. உங்களைப் போன்ற உணர்வுதான் எனக்கும். ஐ.. ஐ.. லவ்... யூ.. ஜீவா என்றாள் கண்ணீருடனும், புன்னகையுடனும்.

மினி இன்று உனக்கு ஒரு பெரிய பரிசு தரப்போறேன். வீட்டுக்கு போகலாம் வா என்று ஜீவா அவனது வீட்டுக்கு அழைத்துச் சென்றான். வீட்டில் ஜீவாவின் அம்மா, அப்பா இருவரும் ஜீவாவுக்கு பார்த்த பெண்ணை பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது.... ஜீவா மினியுடன் வந்து நின்றான். ஜீவாவின் பெற்றோர் வியப்புடன் இருவரையும் நிமிர்ந்து பார்த்தார்கள். மினி சற்றுத் தள்ளிச் சென்று சுவரோரம் ஒதுங்கினாள்.

அப்பா இங்க பாருங்க, இவளின் பெயர் மினி. நம்மட தில்லை அங்கிள்ர மகள். உங்களுக்கும் தெரியும். இவளை நான் உயிருக்குயிராக காதலிக்கிறன். என்னுடைய படிப்பு முடிந்ததும் இவளை எனக்கு திருமணம் செய்து தர உங்களுக்கு சம்மதம் தானே? என்று கூறியதும்... நடராஜன் ஏதோ சொல்ல முயன்றார். ஆனால் மகன்... இருங்கப்பா என இடைமறித்து நீங்கள் அப்போது யாரோ ஒரு பெண்ணை எனக்கு பார்த்ததா கூறினீர்கள் அல்லவா? எனக்கு அதெல்லாம் வேண்டாம். எனக்கு யாரையும் பிடிக்கவும் இல்லை. பிடிச்சது மினி மட்டும்தான்... ப்ளீஸ் அப்பா... என்று கெஞ்சலாகக் கூறினான் ஜீவா.

இல்லை மகன்... என்று அப்பா கூறும் முன்பே நான் இவ்வளவு சொல்கிறேன் நீங்கள் மறுத்துக் கொண்டே இருக்கிறீங்க என்ன என்று சொல்லும்போதே மினியின் அப்பா தில்லைநாதன் வந்தார். "வாங்க அங்கிள்" என்றான் ஜீவா.

மினி பயத்தில் ஓடிச் சென்று ஜீவாவின் பின்னால் ஒழிந்து கொண்டாள். "வாங்க தில்லைநாதன்" என்று நடராஜன் அழைக்க உங்களிடம் ஒரு முக்கியமான விடயம் கதைக்கணும் என்று கூறி நடராஜன் அருகில் வந்து.. முதலில் என்னை மன்னித்து விடுங்கள்... என்றார் தில்லைநாதன்.

நீங்கள் எதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும்.. நான்தான் உங்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். ஏனென்றால் உங்களுக்கு கொடுத்த வாக்கை என்னால் காப்பாற் முடியவில்லை... என்ன சொல்றிங்க... என்றார் தில்லைநாதன்.

நடப்பவை எவையுமே புரியாமல் தங்கள் பெற்றோரையே பார்த்துக் கொண்டிருந்தனர் ஜீவாவும், மினியும். நடராஜன் மிகவும் சோகமாக " ஆமாம் தில்லை" என்னுடைய மகனுக்கு உங்களது மகளை பேசி முடித்தேன். ஆனால் அவன் அவளை மணக்கமாட்டேன் என்று கூறி தான் விரும்பிய பெண்ணை கூட்டி வந்து அவளையே திருமணம் செய்து தரும்படி கேட்டுக் கொண்டு நிக்கிறான் என்றார் நடராஜன்..

தில்லைநாதன் வியப்புடன் பார்க்க... அப்பா நீங்கள் எனக்கு மினியையா? பேசினிங்க... என்றான் ஆச்சரியம் கலந்த சந்தோசத்துடன்... சிரித்துக் கொண்டே தலையசைத்தார் நடராஜன். சொல்லவேயில்லையே அப்பா... என்றான் ஜீவா சிணுங்கலாக.

நீ எங்க சொல்ல விட்டாய்... நான் சொல்ல வந்ததை நீ சொல்ல விடவேயில்லையே. நீயே பேசிக் கொண்டிருந்தாய் என்றதும் "அப்பா" என்று தன் தந்தையைக் கட்டியணைத்தான் ஜீவா. மினியும் அழுதுகொண்டே தன்னுடைய அப்பாவைக் கட்டிக் கொண்டாள். நடராஜன் நடந்த விடயங்களை தில்லைநாதனுக்கு கூறிக் கொண்டே வாசலை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். மினியும், ஜீவாவும் தங்கள் காதல் ஜெயித்ததை உணர்ந்து ஒருவரோடு ஒருவர் கைகோர்த்துக் கொண்டனர்.

இவ்வாரக் கதை

# மனச்சுமை...

-இனோஸா பர்வீன்-
மூதூர்

அது ஒரு மாலை நேரம் கதிரவன் தன் ஒளியை இழந்து மெல்ல மெல்ல இருளைப்பரப்பிக் கொண்டிருந்தான் நஸிஹா தனது கணவரின் வருகைக்காக வைத்த கண்வாங்காமல் சாளரம் வழியாகப் பாத்துக் கொண்டிருந்தாள் நஸிஹா. தனது கணவன் ஸமீம் மீது உயிரையே வைத்திருந்தாள். நஸிஹாவின் இதயம் ஸமீமைச் சுற்றி வலம் வந்துகொண்டிருந்தது. ஸமீமை சிறிது நேரம் காணாவிட்டால் நஸிஹா துடித்து விடுவாள்.

இரவு எட்டுமணியளவில் சமீம் நஸிஹாவுக்கு சலாம் கூறியபடியே. உள்ளே வருகின்றான். நஸிஹாவின் வாடிய வதனம் அப்போதுதான் மலர்ந்தது. கணவன் மனைவி என்ற உறவைப்பார்த்தால் யாரும் பொறாமை கொள்வார்கள் அந்தளவு இருவரும் நேசமும் பாசமுமாக இருந்தனர்.

நஸிஹா அழகானவள், மார்க்கப்பற்று நிறைந்தவள், மற்றவர்களை ஆதரிப்பதில் சிறந்தவள்.ஆனால் நஸிஹாவை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது குழந்தை இல்லாதது. நஸிஹா தினமும் அல்லாஹ் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள் குடிக்காத மருந்தே இல்லை. புனித ஹஃ. பாவை காணச் செல்பவர்களிடம் தனக்கு குழந்தைப் பாக்கியத்திற்கு துஆச் செய்ய வேண்டிக்கொள்வாள்.

சமீமிற்கும் தனது மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க தினமும் இறைவனைப் பிரார்த்தித்தான். நஸிஹாவை கண்கலங்க விடமாட்டான். சமீம் அல்லாஹ் என்றாவது ஒரு நாள் குழந்தையைத் தருவான் என்று ஆறுதல் பகர்வான்.

இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என்று ஏங்கித்துடித்தாள். திருமணமாகி பல வருடங்களாகி விட்டன அல்லாஹ் கைவிடமாட்டான் என்று மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தாள்.

மலடி என்ற சொல் அவளின் மனக்குமுறலை வெளிப்படுத்தியது. இப்பழிச்சொல்லில் இருந்து விடுபட அவாக்கொண்டாள்.

நஸிஹாவின் பெற்றோருக்கு தனது மகளுக்கு குழந்தை இல்லை என்று தவியாய் தவித்தனர்.

குழந்தை இல்லாதவருக்குத்தான அதன்அருமை புரியும் அழகும், அறிவும் கொண்ட நஸிஹா பொறுமையாக இருந்தாள்.

அன்று வெள்ளிக் கிழமை நஸிஹாவும் சமீமும் கடற்கரைக்குச் சென்று அலாதியாக பேசிக் கொண்டிருந்த போது நஸிஹா தீடீரென மயக்கமுற்று கீழேவிழுந்து விட்டாள் செய்வதறியாது திகைத்தான். உடனே வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றான்.

வைத்தியர் பரிசோதித்துவிட்டு உங்கள்மனைவி தாய்மையடைந்திருக்கிறாள் என்று சொன்னதுமே ஸமீம் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினான். நஸிஹா மயக்கம் தெளிந்த பிறகு தாய்மை அடைந்த செய்தியை சொன்னதுமும் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினாள்.

சந்தோச பெருமிதத்தால் கண்ணீர் சிந்தினாள். எண்ணில் அடங்கா ஆனந்தம் அடைந்தாள் காலங்கள் உருண்டோடின

நஸிஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மிகவும் கஷ்டத்திற்கு மத்தியில் ஆண்குழந்தையை பிரசவித்தாள்.

ஸமீம் குழந்தையை மெச்சினான். கண்ணை இமை காப்பது போன்று தனது மகனை வளர்த்தாள். பாலுடன் பாசத்தையும், நட்பையும், ஊட்டினாள். தனது மகன் மீது உயிரையே வைத்திருந்தாள். நஸிஹா தினமும் மகனுக்காக பிராத்தனை செய்வாள்.

நல்ல பண்புள்ள மகனான வளர்த்து வந்தாள் மகனின் ஐந்தாவது வயதில் ஸமீம் இறையடி சேர்ந்தான். கணவனை இழந்த வேதனையுடனும் மகனை பக்குவமாய் வளர்த்தாள். மகன் றிஸ்மியும் படித்து வைத்தியத்துறைக்கு பல்கலைக் கழகம் சென்றான்.

தனது மகன் வைத்தியராக வருவான் என்று கனவு கண்டுகொண்டிருந்தாள் அவள் கண்ட கனவு நிறைவேறியது.

அல்லாஹ்விற்கே நன்றி சென்னாள் இப்பொத மகன் அழகானவனாகவும் அறிவுள்ளவனாகவும் இருப்பதை எண்ணி இறுமாப்பு அடைந்தாள்.

தனது மகனுக்கு திருமணமும் விரும்பியபடி செய்து வைத்தாள். மகன் அக்கரைப்பற்றில் வேலை செய்து கொண்டிருந்தான். அங்கே வீடுவாசலும் கட்டி சந்தோசமாக குடித்தனம் நடத்தினான்.

அங்குள்ள வைத்தியசாலையில் ஒரு வைத்தியராக வேலைசெய்தான்.

தனது மகனின் பிரிவு நஸிஹாவை வாட்டியது. நஸிஹா மகனைப் பார்ப்பதற்காக அவனின் வீடு சென்றாள். அங்கு சென்றதும் ஸமீம் தாயைப் பெரிது படுத்தவில்லை. இவளின் மனம் வேதனையால் ததும்பியது.

மகனை நான் படாத பாடுபட்டு மலடிப்பட்டம் பெற்றே இவனை ஈன்றெடுத்தேன். இவன் ஏன் இப்படி நடந்து கொள்கிறான். என்று வேதனைப்பட்டாள்

அப்போதும் அவனுக்காகப் பிராத்தனை செய்தாள். ஒரு சில நாட்களின் பின் வீடு திரும்பினாள்.

வீடு வந்து மகனை சிந்தித்து சிந்தித்து நோயாளியாக ஆகிவிட்டாள் வயதான பிறகு தன்னைப்பார்ப்பதற்கு யாருமில்லை என்று பாசத்திற்கு ஏங்கினாள்.

நஸிஹா போண் பண்ணியும் அவனது மகன் ஒரு சில வார்த்தைகள் மட்டுமே பேசுவான். ஆனால் தன்னைவந்து பார்க்க வில்லை என்று ஏக்கப் பெருமூச்சு விடுவாள்.

நஸிஹா சீனி வியாதியால் பீடிக்கப்பட்டு மரணத்தருவாயில் கிடக்கிறள்.

வைத்திரான மகன் தனக்கு வைத்தியம் பார்க்கவில்லையே என்று துவண்டாள். மரணம் யாரைத்தான் விட்டது? மகனின் வதனத்தைக் காண அவாகொண்டாள். நஸிஹாவிற்கு தனது மகனின் முகம் பார்க்கக் கிடைக்க வில்லை. நஸிஹாவின் உயிர் பிரிந்தது.

இன்னாலில்லாஹி வயின்ன இலைஹி ராஜிஊன்

மகன் வருகிறான், அழுகிறான், அழுது என்ன பயன்? நஸிஹாவின் உடல் மனச்சுமைகளோடு மண்ணறை சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றே நீ வீசு...

காற்று மாறிப் போயிற்று
மேற்கிருந்து மேலெழுந்து-காற்று
கிழக்கிருக்கும் அனைத்தையும்
மோதும் - அது
கச்சான் காற்றாம்...

கச்சான்
கடலில் மோதக்
கடலோ ஆர்ப்பரிக்கும்...
அமைதியாய் தூங்கும்
அதன் அங்கங்கள் உசும்பும்
மெதுவாய் அலை கிளப்பும்....

அலைகள்
வரியாகும்.... இடையே
வெண்நிறங்கள் பூக்கும்

அலை
மோகங்கொண்டோடிக் - கரை
மண் மீது மோதும் - இளமண்
காதல் கொண்டு
அலையிற் கரையும்
முதிர் மண்ணோ – மோதலாற்
சிணங்கொள்ளும் - துகளாய்
மேலெழும் -
கச்சான் அத்துகளை –என்
கண்மீது விசிறும்

ஐவிரல் கோர்த்து
முகம் மூடி நாணங்கொள்வேன்
நான்

ஏய் கச்சான் காற்றே
நீ வீசு...

அன்றும்
அவன் அருகிருக்க
நீ செய்த
சில்மிசத்தால்-என்
கண்ணில் விழுந்தன

முதிர் துகள்கள்

ஊதி வெளித்தள்ள – அவன்

இதழ் கூம்பி
அருகில் வந்தான்

நாணங்கொண்டேன் நான்

ஐவிரல் மூடி
முகம் மறைத்து....

இன்று
அவனில்லை அருகில்...

வேற்றான் ஊரேக – வேல்
ஏந்திக் காவல் நின்றான் - பின்னர்
போராடிப் பலியாய் வீழ்ந்தான்

நான் - மறத்தி
கூலிக்கு மண் சுமந்தென்
குடும்பங் காக்கின்றேன்

காற்றே நீ வீசு
கண்ணில் துகள் வீழ்த்து – நான்
ஐவிரல் மூடி முகம் மறைப்பேன்

அப்போதென் அருகில் வருவான்
அவன்

துகள் ஊதி வெளித்தள்ள
இதழ் கூம்பி.... அருகில்....

கதகதப்பாக்கும் அவன்

சுவாசமறியக்

காற்றே...... நீ வீசு

வீசு - காற்றே
நீ வீசு....

- மாயன்-
- 15.6.2013-

## -விழியில் வழியும் -

ஓர் மழை நாளில்
உன் கதவோரம்
காத்து நின்றேன்
நீ வரவில்லை...
பெருகியோடும் மழையில் கூட
உன் அன்பு தான் தெரிந்தது
விளக்க முடியாத சோகமும்
சொல்ல முடியாத மகிழ்ச்சியுமாய்
அன்றைய என் கண்ணீரில்
மழையும் சிறிது நனைந்தது

## -தடுமாற்றம் -

ஆயிரம் பேரின்
கோபத்தைச்
சமாளித்து விடலாம்

ஒரேயொரு நேசத்தை
ஒரு நிமிட அன்புச் செயலை

தாங்க முடியாமல்
வந்துவிடுகின்றதே!
தடுமாற்றம்

-ஜே. மதிவதனி-

# கவி முரசு

## -இருளும் ஒளியும் -

என் அசைவுகளையும்
அந்தரங்கங்களையும்
என்னுடையதான
அம்சங்கள்
ஒவ்வொன்றையும்

அவற்றின் உருவில்
என்னையும்
நீங்கள் தேடுகிறீர்கள்

உங்கள் தேடல்களின்....
விருப்புகளின்....
இன்னும் பலதின் பொருட்டு

உங்களைச் சூழ
வெளிச்சத்தை
பாய்ச்சுகிறீர்கள்
அது உங்களை
அம்பலமாக்குகிறது
தவறுகளும்
மறைக்கப்பட்டவைகளும்
அப்பட்டமாகின்றன.

நீங்கள் பாய்ச்சிய
வெளிச்சத்தின் ஊடாகவே
உங்கள் அசைவுகளையும்
அந்தரங்கங்களையும்
என்னால் வாசிக்க முடிகிறது

உங்களின்
தேடல்கள்
இன்னும் தொடர்கின்றன.
புலப்படவில்லை
நான் புதிராகிறேன்
உங்களைச் சூழ வெளிச்சம்
நான் இன்னும்......
இனியும்....
இருளில்....

-பத்மபிரசன் -

## -ஹைக்கூ கவிதைகள்-

காதல்
பார்வையின் காந்தத்தில்
இதயங்கள்
இணைந்து
பிரசவிக்கும் குழந்தை

கண்ணீர்
உன் முகத்தைப் பார்த்து
காதல் சொன்ன
எனது கண்கள்
கண்ணீரை காணிக்கையாக்குகிறது
உன் கல்லறையில்

இதயம்
உடலுக்குள் இருந்து
தினம் துடிக்கிறது
நாம் இருவரும் சேர
வேண்டும் கல்லறையிலாவது

தி.ரூபா

# இலங்கைத் தமிழர் இடப்பெயர் ஆய்வில் தம்பலகாமம்

## - பாகம் 1 -

-த. ஜீவராஜ்-

'எங்கே வரலாறு மௌனம் சாதிக்கத் தொடங்குகின்றதோ அங்கே இடப்பெயர்களும், ஊர்ப்பெயர்களும் தம் வாய்திறந்து பேசத்தொடங்கும்' என்கிறார் ஊர்ப்பெயர் ஆய்வின் முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடும் திரு.ஆர். ஆளவந்தார் அவர்கள்(1). உலக கவனத்தையீர்த்த இந்த இடப்பெயராய்வு (Toponymy) 18 ஆம் நூற்றாண்டு முதல் ஒரு அறிவியல் துறையாக அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது.

ஆதிகால மக்கள் தங்களது வாழ்விடங்களை நிலைப்படுத்திய பின்பு அவர்களது வாழ்விடங்களை பிற குழுக்களுக்கு அடையாளப்படுத்தவும், இடங்களைப் பிரித்தறிவதற்காகவும் தாம் வாழ்ந்த இடங்களுக்குப் பெயர்களைச் சூட்டலானார்கள். இவற்றில் பல்வேறு வகைப்பாடுகள் இருந்தது. அவை

1. இயற்கைச் சூழல் தொடர்புடைய பெயர்கள் - நீர்நிலைப்பெயர்கள், நிலப்பெயர்கள், மரப்பெயர்கள், பறவை,விலங்குப் பெயர்கள் என்பன.

2. கடவுட் பெயர்கள்

3. அரசர்,அதிகாரிகள் என்போரின் பெயர்கள்

4. புராண,இதிகாச,இலக்கியப் பெயர்கள்

5. தொழில் முறைகள், சாதிப் பெயர்கள்

6. அரசியல்,சமய நடவடிக்கைகள் தொடர்புடைய பெயர்கள் என்பன அவற்றுட் சிலவாகும்.

இவ்வாறு உருவான சில இடப்பெயர்கள் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்ததை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. வரலாற்றில் இடப்பெயர்கள் மாற்றமைடைந்து வந்தமைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அரசர்கள் தாங்கள் வெற்றிகொண்ட பிரதேசங்களின் பெயர்களை மாற்றியமை, ஆட்சியாளர்கள் தங்களால் தானமாக பிறருக்கு வழங்கப்பட்ட ஊர்களின் பெயர்களை மாற்றியமை, அறிஞர்களால் அரசியல்,மொழி,கலாச்சாரப் பின்னணியில் மாற்றியமைக்கப்பட்ட இடப்பெயர்கள் என்பன அவற்றுள் சிலவாகும்.

### - தம்பலகாமம்

ஒரு நாட்டின் வரலாற்றுண் மைகளையும், பண்பாட்டுச் செய்திகளையும் புதைபொருட்களும், கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், நாணயங்களும், மட்பாண்டங்களும் முதுமக்கள் தாழிகளும், இலக்கிய ங்களும் எடுத்துச் சொல்வது போன்று, இடப்பெயர்களும் வரலாற்று ஆய்வுக்கு உறுதுணை செய்கின்றன. எனவே தமிழில் 'இடப்பெயராய்வு' ஒரு முக்கிய ஆய்வுத் துறையாக வளர்ந்து வருவதை அண்மைக்காலமாக காணக்கூடியதாக உள்ளது.

இலங்கைத் தமிழர் வரலாற்றின் தொன்மை பற்றிய தேடல்களுக்கான தேவை அதிகரித்திருக்கும் இக்காலகட்டத்தில் இடப்பெயர் ஆய்வு முக்கிய இடத்தினைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தமிழர் இடப்பெயர் ஆய்வுகளில் பின்வரும் காரணிகள் செல்வாக்கு செலுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

1). இலங்கையில் தொல்குடிகளாக வாழ்ந்த திராவிடர்கள்.

2). வணிக,அரசியல் மற்றும் குடியேற்றம் தொடர்பான இலங்கை - இந்திய தொடர்புகள்.

3). தமிழ், சிங்களம் ஆகியவற்றில் உள்ள வட இந்திய மொழிகளின் செல்வாக்கு.

4) இலங்கையிற் தமிழர் வளர்த்த பௌத்தம் (தமிழ் பௌத்தர்கள், தமிழ் தேரர்கள், சோழர்கள்)

5). காலணித்துவ ஆட்சி

6). இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் கால வரையறைப்படி அட்டவணைப்படுத்தப்படாமை. (ஏறக்குறைய 150 தமிழ்ச் சாசனங்கள் உள்ளன என்பது ஒரு கணிப்பீடாகும்.) அத்துடன் வரலாற்றாதாரங்களையும், கலாச்சாரச் சின்னங்களையும் பேணிக்காப்பதில் தமிழர் எதிர்நோக்கும் சிக்கல்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றோடு பண்டைக்காலம் முதலாக ஒரு மொழியின் இலக்கண வரம்பிற்கமைய ஆக்கம் பெற்று வழங்கிவந்த இடப்பெயர்கள், காலப் போக்கில் பேச்சு வழக்கில் சிதைந்து அதன் தோற்றக் காரணம், பெயர் விளக்கம் என்பன மறைந்துபோக, அவற்றுக்குப் பிற்காலத்தோரால் புதிய காரணகாரியந் தொடர்பான விளக்கங்களும் கதைகளும் புனைந்துரைக்கப்பட்டிருப்பதையும் கருத்தில்கொள்ளவேண்டியுள்ளது.

கரிய குவளைத் தளிர் மேய்ந்து
கடைவாய் குதட்டித் தேன் ஒழுக
எருமை கிடந்து மூச்செறியும்
எழிலார் தம்பை வளநாட்டில்
(திரிகோணாசல புராணம் )

மேற்படி விடயங்களின் பின்னணியில் தம்பை நகர் என்று திரிகோணாசலப் புராணம் சிறப்பித்துக்கூறும் கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்திருக்கும் நீர்வள, நிலவளச் சிறப்பைக் கொண்டமைந்த தம்பலகாமம் என்னும் கிராமத்தின் இடப்பெயர் ஆய்வே இத்தொடர் கட்டுரையின் நோக்காகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## ஆங்கில படத்தில் மாதவன்



மாதவன் ஆங்கில படத்தில் நடிக்கிறார். 1968–ல் வெளியான நைட் ஆப் லிவ்விங்டெட் என்ற ஹாலிவுட் படம் 3டியில் ரீமேக் ஆகிறது.

இதில் டேனியல் ஹாரிஸ், டாம்ஸைஸஸ்மோர், டானிடாட், சுலோனா டால், ஷாராஹபில் போன்ற முன்னணி ஹாலிவுட் நடிகர்கள் கதாநாயகர்களாக நடிக்கின்றனர்.

இவர்களுடன் மாதவனும் ஒரு கதாநாயகனாக நடிக்கிறார். ஜமிதியா டிசோட்டோ இயக்குகிறார். திகில் படமாக உருவாகிறது. இதில் நடிப்பது குறித்து மாதவன் கூறும்போது, நைட் ஆப் லிவ்விங்டெட் ஹாலிவுட் படத்தின் 3 டி ரீமேக்கில் நடிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஹாலிவுட்டில் பெரிய ஹிட் படங்கள் எடுத்த கம்பெனி இப்படத்தை தயாரிக்கிறது. என்னை இந்த படத்தில் நடிக்க தேர்வு செய்ததை பெருமையாக கருகிறேன் என்றார்.



## தலைவா சிக்கலில்!!

சமீபகாலமாக விஜய் படங்கள் பெரும் பிரச்சினைகளை சந்தித்து வருகிறது. முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்த 'துப்பாக்கி' படம் தலைப்பு பிரச்சினையில் சிக்கி, வெளியாவதில் பல்வேறு பிரச்சனைகளை சந்தித்து இறுதியாக படம் வெளியாகி, சூப்பர் ஹிட்டனாது.

'துப்பாக்கி' படத்திற்கு பிறகு விஜய் நடிப்பில் உருவாகியுள்ள 'தலைவா' படத்திற்கும் தற்போது பிரச்சனை எழுந்துள்ளது. அடுத்த மாதம் வெளியாகவுள்ள நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இப்படம் தணிக்கைக் குழு பரிந்துரைக்கு அனுப்பப்பட்டது. இப்படத்தை பார்த்த தணிக்கைக் குழுவினர் படத்தில் வன்முறை காட்சிகள் அதிகமாக இருப்பதாக கூறி யு/ஏ சான்றிதழ் வழங்க முடிவு செய்தனர். யு/ஏ சான்றிதழ் வழங்கப்பட்டால் படத்திற்கு வரி விலக்கு கிடைக்காது என்பதால், படக்குழுவினர் தங்களுக்கு 'யு' சான்றிதழ் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றனர்.

ஆனால் தணிக்கைக் குழுவினர் இதனை ஏற்கவில்லை. மாறாக, சில காட்சிகளை நீக்கினால் 'யு' சான்றிதழ் தருவதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்கும் படக்குழு மறுப்பு தெரிவித்துள்ளது. இதையடுத்து மறு தணிக்கைக்கு படத்தை அனுப்ப படக்குழு முடிவு செய்துள்ளது. 'தலைவா'படத்தில் விஜய்-க்கு ஜோடியாக அமலா பால் நடித்துள்ளார். மேலும், சந்தானம், சத்யராஜ், மனோபாலா ஆகியோரும் நடித்துள்ளனர். இப்படத்தை ஏ.எல்.விஜய் இயக்கியுள்ளார். ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். ஸ்ரீமிஸ்ரி புரொடக்ஷன்ஸ் சார்பில் சந்திரபிரகாஷ் ஜெயின் தயாரித்துள்ளார். வேந்தர் மூவிஸ், இம் மாதம் படத்தை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது.




## சொன்னா புரியாது

ஒரு பார்வை..



வேற்று மொழிகளில் எடுக்கப்படும் படங்களுக்கு தமிழில் டப்பிங் பேசும் பணி செய்து வருகிறார் சிவா. இவருடைய நண்பராக வருகிறார் 'பிளேடு' சங்கர். அப்பா இல்லாமல் அம்மா அரவணைப்பில் வாழும் சிவாவுக்கு திருமணத்தின் மீது ஈடுபாடு இல்லை.

ஆனால் அவருடைய அம்மாவோ சிவாவுக்கு எப்படியாவது திருமணம் செய்து வைக்கவேண்டும் என முயல்கிறார். இருந்தும் சிவா அடம்பிடிக்கவே, திருமணம் செய்யவில்லையென்றால் திருப்பதி, பழனி, ராமேசுவரம் என சன்னியாசம்போகப்போவதாக அவருடைய அம்மா மிரட்டுகிறார்.

அம்மா மீது பாசம் கொண்ட சிவா, அம்மாவை பிரிய மனம் இல்லாததால் திருமணத்திற்கு சம்மதிக்கிறார். இதையடுத்து, மனோபாலா நடத்தும் திருமண தகவல் மையத்திற்கு சென்று பெண் பார்க்கின்றனர். அங்கு நாயகி வசுந்தராவின் புகைப்படத்தை பார்த்ததும் பிடித்துப்போக, அவளையே சிவாவுக்கு திருமணம் முடித்து வைக்க சிவாவின் அம்மா முடிவெடுக்கிறார்.

பின்னர் அவளுடைய வீட்டிற்கு சென்று நிச்சயதார்த்தமும் செய்துவிடுகிறார்கள். வசுந்தரா டிவியில் நிகழ்ச்சி தொகுத்து வழங்கும் பணியை மேற்கொண்டு வருகிறார். அரைகுறை மனதுடன் திருமணத்திற்கு சம்மதித்த சிவா இந்த திருமணத்தை எப்படியாவது தடுத்து நிறுத்திவிட வேண்டும் என முயற்சி எடுக்கிறார்.இந்நிலையில், இந்த திருமணத்தில் வசுந்தராவுக்கும் சம்மதம் இல்லை என்பதை அறிகிறார். இறுதியில் இருவரும் இணைந்து திருமணத்தை நிறுத்தினார்களா? அல்லது இருவரும் ஒன்று சேர்ந்தார்களா? என்பதை நகைச்சுவையுடன் கலந்து சொல்லியிருக்கிறார்கள்.

சிவா வழக்கமான நக்கல், நையாண்டி பேச்சால் படம் முழுக்க கலகலக்க வைத்திருக்கிறார். குறிப்பாக இந்தியில் இவர் எழுதி, பாடும் பாடல் மெய்சிலிர்க்க வைக்கிறது. வசுந்தரா மீதான காதலை கவிதையாக சொல்வது ஏட்டில் பதிக்கவேண்டியது. வசுந்தரா காஷ்யாப் அழகாக இருக்கிறார். எதார்த்தமான நடிப்பை அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார். பாடல் காட்சிகளில் காதல் ரசம் சொட்ட சிவாவுடன் ஆடிப்பாடுவது ரசிக்க வைக்கிறது. சிவாவின் நண்பராக வரும் 'பிளேடு' சங்கர் அழுத்தமான கதாபாத்திரத்தில் மனதில் இடம்பிடிக்கிறார். இயக்குனர் கிருஷ்ணன் ஜெயராஜ் கலகலப்பான காமெடி படத்தை கொடுக்க முயற்சித்தத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்.

## தனுசஷ் ஜோடியான்து மகிழ்ச்சி: அமலாபால்

அமலாபால் தலைவா படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடித்துள்ளார். இத்திரைப்படம் இம் மாதம் வெளியாகிறது. இதையடுத்து இவர் தனுஷ்க்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

ஏற்கனவே '3' படத்தில் தனுசுடன் அவர் நடிப்பதாக இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் சுருதிஹாசனை தேர்வு செய்துவிட்டனர். இப்போது மீண்டும் தனுஷ் ஜோடியாக நடிக்க அமலாபாலுக்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. இந்த படத்தை ஒளிப்பதிவாளர் வேல்ராஜ் டைரக்ட் செய்கிறார். இவர் தனுசின் பல படங்களுக்கு கேமராமேன் ஆக பணியாற்றியுள்ளார். அனிருத் இசையமைக்கிறார். தனுசே இத்திரைப்படத்தை தயாரிக்கிறார். இன்னும் இத்திரைப்படத்துக்கு பெயர் வைக்கவில்லை.

தனுசுடன் நடிப்பது குறித்து அமலாபால் கூறியதாவது:–

தனுஷ்க்கு ஜோடியானது மகிழ்ச்சியளிக்கிறது. '3' படத்தில் இருந்த அதே குழுவினர் இப்படத்திலும் இருக்கிறார்கள். '3' படத்தில் கால்சீட் பிரச்சினையால் வாய்ப்பை இழந்தேன். இப்போது மீண்டும் தனுசுடன் நடிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. டைரக்டர் வேல்ராஜ் என்னிடம் வந்து கதை சொன்னார். அதில் எனது கேரக்டர் மிகவும் பிடித்து போனது. நல்ல கதை. இந்த படம் சிறப்பாக வரும் என்ற நம்பிக்கை உள்ளது எனக்கூறினார்.

## 'பிரியாணி'-க்காக பாடல் அமைத்த 5 இசையமைப்பாளர்கள்

'மங்காத்தா' வெற்றியைத் தொடர்ந்து வெங்கட் பிரபு இயக்கி வரும் புதிய படம் 'பிரியாணி'. இப்படத்தில் கார்த்தி, ஹன்சிகா மொத்வானி, பிரேம்ஜி அமரன் ஆகியோர் நடித்து வருகின்றனர். இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். இது இவர் இசையமைக்கும் 100-வது படமாகும்.

யுவனின் 100-வது படத்திற்கு மெருகூட்டும் விதமாக ஐந்து இசைமைப்பாளர்கள் ஒருங்கிணைந்து இப்படத்தில் ஒரு பாடலை அமைத்து இருக்கிறார்களாம். அதன்படி, விஜய் ஆண்டனி, இமான், ஜீ.வி.பிரகாஷ், தமன் ஆகியோர் யுவனுடன் சேர்ந்து ஒரு பாடலை அமைத்து இருக்கிறார்கள்.

தமிழ் சினிமாவிலேயே முதன்முதலாக ஒரு பாடலுக்கு ஐந்து முன்னணி இசைமையப்பாளர்கள் ஒன்றாக இணைந்து ஒரு பாடலை அமைத்திருப்பது இதுவே முதல் முறையாகும். மேலும், இசைஞானி இளையராஜா குடும்பத்தில், இளையராஜா, கங்கை அமரன் ஆகியோரைத் தொடர்ந்து 100 படங்களுக்கு இசையமைத்த பெருமையும் இந்த படத்தின் மூலம் யுவனுக்கு கிடைத்துள்ளது.

இதுபோன்று இசையமைப்பாளர்கள் கூட்டு முயற்சியுடன் இணைந்து செயல்படுவது தமிழ் சினிமாவில் ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும் என சினிமா ஆர்வலர்கள் கருதுகின்றனர்.



## பில்லாவைவிட 'ஆரம்பம்' விறுவிறுப்பாக இருக்கும்: இயக்குனர் விஷ்ணுவர்தன்



அஜீத், ஆர்யா, நயன்தாரா நடிப்பில் உருவாகியிருக்கும் 'ஆரம்பம்' திரைப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து திரைக்கு வர தயார் நிலையில் உள்ளது. இதுவரை இப்படம் குறித்து படக்குழுவினர் யாருமே வாய்திறக்கவே இல்லை. இந்நிலையில், முதல்முறையாக இப்படத்தின் இயக்குனர் விஷ்ணுவர்தன் படத்தின் முக்கிய அம்சங்கள் குறித்து விவரித்துள்ளார். அதன் விபரம் வருமாறு:-

'ஆரம்பம்' என்ற தலைப்பு எல்லோரையும் கவர்ந்துள்ளது. இந்த தலைப்புக்கான தாமதம் திட்டமிடப்பட்டது அல்ல. ஆனால் இந்த வரவேற்பு கிடைக்க அந்த தாமதமும் ஒரு காரணம் என்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயம்தான். இது ஒரு போராட்ட குணமுள்ள ஒரு தனி மனிதனின் கதை. கதையில் வரும் மற்ற கதாபாத்திரங்கள் அந்த பிரதான சூரியனை சுற்றி வரும் கோள்கள்தான்.

'மங்காத்தா' படத்தில் நடித்தது [illegible] படத்திலும் அஜீத் நரை [illegible] முடியுடன்தான் நடிக்கிறார். 'மங்காத்தா' படத்துக்கு முன்னரே அஜீத்திடம் என் படத்துக்கு இந்த கெட்டப்தான் வேண்டும் என்று கேட்டிருந்தேன், ஆனால் வெங்கட்பிரபு முந்திக் கொண்டார். இந்த ஸ்டைல் அவர் அளவுக்கு வேறு யாருக்காவது அமைந்து இருக்குமா என்றால் சந்தேகமே. இது விறுவிறுப்பான வேகமான படம். எங்களது கூட்டணியில் உருவான 'பில்லா' படத்தை விட பல மடங்கு வேகமாக இருக்கும். அஜீத் ரசிகர்களை மட்டுமின்றி எல்லா தரப்பு ரசிகர்களையும் கவரும் படமாக இருக்கும் என்பது நிச்சயம் எனக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் தளத்தை இணையத்தள திருட்டில் இருந்து பாதுகாப்பது எப்படி?

இன்று உங்கள் இணையத்தளத்தை அல்லது வலைப்பக்கத்தை வேறு ஒரு தளம் முழுமையாக பயன்படுத்துவதை எப்படி தடுக்கலாம் என்பதை பார்ப்போம். உதாரணமாக, பிரபல்யமான பல இணையத்தளங்களில் வேறு பல இணையத்தளங்களை தமது தளத்தில் iframe மூலமாக இணைத்து பயன்படுத்தி வருகின்றனர். அவ்வாறான iframe களில் உங்கள் தளம் சிக்காமல் பாதுகாப்பது எப்படி என்பதை காணலாம். முதலில் iframe என்றால் என்ன என்பதை பார்ப்போம். iframe என்பது ஒரு தளத்தில் இன்னோர் தளத்தை முழுமையாகவோ பகுதியாகவோ இணைத்து பயன்படுத்த உதவும் ஒரு தொழில் நுட்பமாகும்.

iframe இன் தீமைகள்! உதாரணமாக ஒரே தளத்தில் பல தளங்கள் இணைக்கப்படும் போது, அந்த தளத்திற்கு சென்றால் அனைத்து தளங்களையும் பார்க்க முடியும் என்ற மன நிலை பாவனையாளர்களிடம் தோற்றுவிக்கப்படும். இதனால் ஏனைய தளங்களுக்கான நேரடி பாவனையாளர்கள் குறைவார்கள்.

உங்கள் தளத்தில் தங்கி நிற்போரின் நேரம் பங்கிடப்பட்டுவிடும். (இப்போது Facebook தளத்தில் நீங்கள் Youtube Video வை பகிர்ந்தால்... அது தொடுப்பாக மட்டுமே பகிரப்படும். முன்பு போல் Facebook இலேயே நீங்கள் Video வை பார்க்க முடியாது! காரணம் தள வருகையை அதிகரிக்கவே!)

தடுப்பு முறை கீழுள்ள Java Script ஐ உங்கள் தளத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இணைக்கவேண்டும்! (உங்கள் தளத்தின் Header அல்லது footer அனைத்து பக்கங்களுக்கும் பொதுவானது என்றால்... Header இக்கு கீழே இவ் நிரலை இணைத்தால் போதும்!)

```
<script type="text/javascript">
<!–
    if (top.location!= self.location) {
top.location = self.location.href
}
//–>
</script>
```



இனி உங்கள் வலைத்தளத்தை யாருமே தங்கள் தளத்தில் iframe ஆக இணைக்க முடியாது! இணைத்தாலும் iframe இற்குள் கட்டுப்படாது.

**தெரிந்து கொள்ளுங்கள்–**

You tube கண்டு பிடிக்கப்பட்ட ஆண்டு 2005.

நாள் ஒன்றுக்கு 65000 வீடியோக்கள் You tube இல் பதிவேற்றப்படுகின்றன.

ஒரு சாதாரண அமெரிக்க குடிமகன் நாளொன்றுக்கு 4 மணித்தியாலயங்கள் You tube இணை பார்வையிடுகின்றான்..

# விளையாட்டுப் பையன்

## பேஸ்புக் மெசேஞ்சரில் எஸ்எம்எஸ் அனுப்பலாம்

பேஸ்புக் மெசஞ்சரில் எஸ்.எம்.எஸ் அனுப்பும் வசதியை பேஸ்புக் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி அன்ட்ரொய்ட் மெசேஞ்சர் அப்ளிகேசனை அப்டேட் செய்வதன் மூலம் இந்த புதிய தொழில்நுட்ப வசதியை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இந்த சேவையை பேஸ்புக் கணக்கு மற்றும் மின்னஞ்சல் முகவரி இல்லாமலும் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதியை பேஸ்புக் நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்த புதிய பேஸ்புக் மெசேஞ்சர் அப்ளிகேசன் வசதியானது இந்தோனேசியா, வெனிசுலா, அவுஸ்திரேலியா மற்றும் தென்னமெரிக்கா ஆகிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஏனைய நாடுகளிலும் அதனை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சேவையைப்பெற பயனாளர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண் மட்டும் போதுமானது என்று பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்காக இந்நிறுவனம் பல முன்னணி கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களுடன் இணைப்பு வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஒரு கொலையின் கதை

(14)



எனவே அவர்கள் அந்தத் தலைமயிர் வளர்த்த, கடுக்கண் அணிந்தவனை வெளிப்படையாகத் தேடத் தொடங்கினார்கள்.

அதற்கு முன் அம் மர்ம மனிதனின் சரியான வடிவத்தை கேதீஸின் மனைவியின் தங்கையிடம் விசாரித்துத் தெரிந்துகொண்ட புலனாய்வாளர்கள் அம் மர்ம மனிதன் தொடர்பாகக் கேதீஸின் தமயனிடம் விசாரணையைத் தொடங்கிய போது விடயமொன்று புலனாய்வாளர்களுக்கு உறுத்தத் தொடங்கியது.

தலைமயிர்வளர்த்த கடுக்கண் அணிந்தவனைப் பற்றித் தகவலைத் தெரிந்து கொண்ட போது அவ் விளைஞன் அண்மையில் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்திருந்தான் என்ற தகவலே புலனாய்வாளர்களை உறுத்தியது.

அவனைத் தொடரத் தொடங்கிய புலனாய்வாளர்கள் அவனது இருப்பிடம் போக்கிடம் ஆகியவற்றைத் தெரிந்து கொண்ட பின் அவனை விசாரணைக்காக அழைக்கும் கடிதமொன்றை அவனது வீட்டிற்கு அனுப்பிவைத்தார்கள். அந் நேரத்தில் அவனைப்பின் தொடர்ந்தபடி இரு புலனாய்வாளர்கள் இருந்தனர்.

அவனது இருப்பிடம் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த போது சந்தேகத்திற்கிடமான எந்தவொரு விடயத்தையும் புலனாய்வாளர்களால் கண்டுகொள்ள முடியாது போயிருந்தது. அதனால் தமது இறுதி அஸ்திரமான விசாரணைக் கடிதத்தை அவனுக்கு அனுப்பி அவனது நடமாட்டங்களை அவதானிப்பதற்காக இரு புலனாய் வாளர்களையும் அமர்த்தியிருந்தனர்.

விசாரணைக் கடிதத்தைக் கண்டவுடன் அவனது நடத்தையில் மாற்றம் எதனையும் அவதானிக்க முடிந்தால் மேற்கொண்டு சரியான விசாரணைகளைத் தொடரும் திட்டத்தை புலனாய்வாளர்கள் கொண்டிருந்தனர்.

ஆனால்....



அவன் எவ்வித பதட்டமுமின்றி விசாரணைக்குச் சமூகமளித்திருந்தான்......... ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின்னர் அவன் மீதான சந்தேகக் கறை முழுவதுமாக நீங்கிப் போயிருந்தது.

சந்தேகநபர்கள் என்று எவரும் இல்லை. தடயங்களோ மிகக் குறைவானவையாக கொலையாளி கைது செய்யப்பட்ட பின்னர் நிரூபிக்கக் கூடியவையாக மட்டுமே இருந்தன. பல்வேறு கோணங்களில் முடுக்கிவிடப்பட்ட விசாரணைகள் பலனின்றி பயணித்துக் கொண்டி ருந்தன.

புலனாய்வாளர்கள் ஒரு தடவை கேதீஸின் தாயாரை விசாரணை செய்து கொண்டிருந்த போது அவர் "என்ட மகன் தண்ட ரத்தத்தால அவன்ட கழுத்தில கட்டியிருந்த சிவலிங்கத்துக்கு அபிசேகம் செய்திருக்கிறான். கட்டாயம் எல்லாரும் பிடிபடுவாங்கள்" என்று கூறியிருந்தார்.

அவ்வாறே கழுத்தறுத்துக் கொல்லப்பட்ட அந்தர ஆத்மாவின் அலறல் ஒலிக்கவேண்டிய இடங்களில் நீதி கேட்டுக் கதறிக்கொண்டேயிருந்தது.

----------

முட்டுச் சந்தொன்றில் தேங்கியிருந்த இக்கொலை வழக்கில் திசை காட்டியாக புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த முதலாவது பிடி கேதீஸின் கையிலிருந்து ... கைப்பற்றப்பட்ட ... நிரப்பு அட்டையால் மீள நிரப்பப்பட்ட தொலைபேசி இலக்கம்.

கேதீஸின் கையிலிருந்து கைப்பற்றப்பட்ட மீள்நிரப்பு அட்டை எந்தத் தொலைபேசி இலக்கத்திற்கு மீள் நிரப்பப்பட்டது என்ற தகவலை புலனாய்வாளர்களுக்கு வழங்குமாறு கைத் தொலைபேசிச் சேவை வழங்குனருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

அக்கட்டளையின் பிரகாரம் சேவை வழங்கு நிறுவனம் தனது பதிலை இருவாரங்களுக்குள் அனுப்பியிருந்தது. தகவலைப் பெற்றுக்கொண்ட புலனாய்வாளர்கள் ஒரு கணம் அதிர்ந்து போனார்கள்.

அத் தெலைபேசியிலக்கத்திற்கு உரித்தானவர் மேல்மாகாணத்தைச் சேர்ந்த பெண்மணியொருவர்.

அடுத்த கணம் அப் பெண்மணியினை இரசகியமாகக் கண்காணிக்கும் ஏற்பாடுகள் நடைபெற்ற அதேவேளை அத் தொலைபேசி தற்போது இயங்குகின்றதா? என்பதை அறிய புலனாய்வாளர்கள் நடவடிக்கை களை முன்னெடுத்தனர்.

அத் தொலைபேசி இயங்கிக் கொண்டுதான் இருந்தது. மூன்று நாட்களுக்கு மேல் அம் மேல்மாகாணப் பெண்மணியினைக் கண்காணித்த போதும் அவரில் எவ்விதமான சந்தேகங்களும் இரகசியப் ...களுக்கு ஏற்படவில்லை. ... அப் பெண்மணியினை அனுக அவர்கள் உடனடியாக

விரும்பவில்லை . ஏனெனில் கிடைத்திருக்கின்ற ஒரே தடயமான அக் கைத் தொலைபேசி இலக்கத்தை இயங்கு நிலையில் வைத்துக்கொண்டே கொலையாளியை அண்மிக்கும் முடிவை புலனாய்வாளர்கள் எடுத்திருந்தனர்.

நேரடியாக அப் பெண்மணியினை அணுகினால் அவர் கொலையாளிக்கு நெருக்கமானவராக இருந்தால் கொலையாளி உசாரடைந்து விடுவார் என்பதாலும், அப் பெண்மணி கொலையாளிக்கு நெருக்கமானவராக இல்லாவிட்டாலும் புலனாய்வாளர்கள் அவரை விசாரணைக்கு உட்படுத்தினால் பதற்றமடைந்து தனது பெயரிலுள்ள கைத்தொலை பேசி இலக்கத்தைப் புலனாய்வுப்பிரிவினரின் கட்டளை களையோ, வேண்டுதல்களையே மீறி செயலிழக்கச் செய்யும் நடவடிக் கைகளை எடுத்துவிடுவார் என்பதாலும், அவரை விசாரணைக்கு உட்படுத்தினால் அத் தகவல் வெளியே கசிந்து கொலையாளிக்குச் சென்றுவிடும் வாய்ப்பு இருப்பதாலும் அப் பெண்மணியை உடனடியாக நேராக அணுகும் திட்டத்தை புலனாய்வாளர்கள் பின்தள்ளி வைத்தனர்.

அடுத்த கட்டமாக இயங்கிக் கொண்டிருக்கும் தொலைபேசியின் இயங்கிடத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் புலனாய்வாளர்கள் இறங்கினர்.

அதற்காக அவர்கள் உயர் தொழில் நுட்ப முறைமையான பூகோள நிலைஅறியும் முறைமை (Global Positioning System-GPS) யைப் பயன்படுத்தினர்.

அம்முறைமை ஊடாகப் பெற்றுக்கொண்ட தகவல்கள் சந்தேகநபரின் இருப்பிடத்தை துல்லியமாகக் காட்டியது.

என்றாலும் அவர்தானா கொலையாளி? என்ற கேள்வி......

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## கபடி, துடுப்பாட்டப் போட்டிகளில் தேசிய வெற்றி - மட்டு-அம்பாறைக்கு..

25ஆவது யூத் ஸ்ரீலங்கா தேசிய விளையாட்டுப் போட்டியின் ஆண்களுக்கான கபடி போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணி சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு கடந்த 25ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை பொலனறுவையில் இடம்பெற்றது.

இதில் ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய அணிகள் தெரிவு செய்யப்பட்டன.12:23 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்ற மட்டக்களப்பு அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு தங்கப் பதக்கத்தினை தட்டிக்கொண்டனர். இந்த போட்டியில் சிறந்த விளையாட்டு வீரராக எஸ். சுகந்தன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அம்பாறை மாவட்டம் மிக சிறப்பாக விளையாடி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மிக சிறப்பாக தமது திறமைகளை வெளிக்காட்டிய அட்டாளைச்சேனை பிரதேசத்தைச்சேர்ந்த ஜமால்தீன் பஸ்மீர் 2013ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



## ஸ்பென்ஸ் கழகம் 3 விக்கெட்டுக்களால் வெற்றி

திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திய லீக் முறையிலான போட்டியில் ஸ்பென்ஸ் கழகம் 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் டைனமிக்ஸ் கழகம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

நிர்ணயிக்கப்பட்ட 50 பந்து பரிமாற்றங்களில் 44.5 பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. கே.சுதர்சன் 66 பந்துகளுக்கு முகம் கொடுத்து 6 நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 72 ஓட்டங்களையும், கிருசாந் 23 ஓட்டங்களையும் பெற்றுகொடுத்தனர். பந்து வீச்சில் ஸ்பென்ஸ் கழகத்தின் சார்பில் நேசன், நிசாந்தன் ஆகியோர் தலா 3 விக்கெடுக்களைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு களம் இறங்கிய ஸ்பென்ஸ் கழகம் 44 பந்து பரிமாற்றங்களில் 7 விக்கட்டுக்களை இழந்து 179 ஓட்டஙகளைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றனர். றிச்சர்ட் ஆட்டம் இழக்காமல் 51 ஓட்டங்களையும், கு.பிரசாந்த் ஆட்டம் இழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றுகொடுத்தனர். பந்து வீச்சில் டைனமிக் கழகம் சார்பில் கொனுஷ், நிதுனன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை பெற்றுகொண்டனர். (கதிரவன்)

மூதூர் தி - அல் மனார் வித்தியாலயத்தின் 25வது வருட (வெள்ளி கிண்ணம்) த்துக்கான உதைப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற மூதூர் யுனைடட் விளையாட்டுக் கழகம், அதன் தலைவர் எம்.எஸ்.எம்.இர்பானுடன், மாகாணசபை உறுப்பினர் ஆர்.டெ.அன்வர் அவர்களையும் ஏனைய விளையாட்டு வீரர்களையும் படத்தில் காணலாம். (ஜவாஹிர்)



# நிறைவுறும் வருடமொன்றின் நினைவுகள் - 4
## "மலைமுரசின் ஓராண்டுப் பயணம்"

- ஆசிரியர் -

நாலாவது பதிப்பின் பின்னர் பத்திரிகைக்கான விலையினைத் தீர்மானிக்க வேண்டிய பெரும் பொறுப்பு எம்முன் பொறிந்தது. 'விலையிடல் பற்றிய எனது படிப்பு' ஏனோ எனது பத்திரிகைக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை. எனினும் வாகசனைப் பாதிக்காத விலையொன்றைத் தீர்மானிக்க முயற்சித்தோம். அது இருபது ரூபா எனத் தீர்மானமாயிற்று. சுமார் 10வது பதிப்பின் பின் தற்காலிக அலுவலகமொன்றை எனது வீட்டின் முதலாவது மாடியில் நிர்மானித்தோம். அன்றைய திகதியில் என்னுடன் ஆர்வமாக பணிபுரிய வந்தவர்களில் நவசஞ்சிதா, கியூரின், பத்மபிரசன், யசோதினி ஆகியோரின் தன்னார்வ உதவிகள் காலத்தால் முக்கிய இடத்தைப் பிடித்தன.

விலையிட்ட பத்திரிகையுடன் வினியோகக் கடைகளைத் தேடி பயணப்பட்டோம். ஏனெனில் இலவச பதிப்புக்களை வினியோகிப்பதற்காக திருகோணமலையின் முக்கிய நான்கு பத்திரிகை வினியோகத்தர்களையும் தேர்வு செய்து அவர்களுக்கு முறையே 250 பத்திரிகைகளை ஆரம்பம் முதல் நான்கு வாரங்களுக்கும் வழங்கியிருந்தோம்.

என்றாலும் விலையிட்ட பின்னர் பத்திரிகைகளை நாமே நேரடியாக வினியோகத்தர்களுக்கும் கடைகளுக்கும் வழங்க விரும்பினோம்.

மிகவும் சிக்கலான நாம் சந்தித்திராத, சிந்தித்தும் இராத வியாபார நடவடிக்கையொன்று அன்று எம் முன் விரிந்தது.

பத்திரிகைத் தொழிலின் இரு புறங்களில் ஒன்றைப்பற்றி மட்டுமே யோசித்துக்கொண்டிருந்த எமக்கு அதன் மற்றைய பக்கம் ஆரம்பமானது.

பத்திரிகைத் தொழிலை இரண்டாக பிரித்து நோக்க வேண்டும் என்பதை மலைமுரசு எமக்கு கற்றுத் தந்தது. அவை முறையே பதிப்பிற்கு முன் (Pre printing) பதிப்பிற்குப் பின் (Post printing) என்பவையாகும். பதிப்பிற்கு முன் பத்திரிகையின் வடிவம் தகவல்கள், உள்ளடக்கப் பரப்பு பொன்றவற்றில் கவனத்தைச் செலுத்த வேண்டியிருப்பது போல் பதிப்பின் பின் உரிய விற்பனையாளர்களுக்குப் பத்திரிகை போய்க் கிடைப்பதை உறுதி செய்தல், அவர்கள் விற்பனையை ஊக்கப்படுத்துவதை நாம் ஊக்கப்படுத்தல், விற்கப்படாத பத்திரிகைகளை மீள எடுத்தல் போன்ற இன்னோரன்ன பதிப்பிற்குப் பிந்திய நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய விடயங்களே எம்முன் புதிதாய் விரிந்த தளமாக இருந்தன.

உற்பத்தியும், சந்தைப் படுத்தலும் என்ற கருப்பொருட்களே அவை. திருகோணமலைக்கான பத்திரிகை யொன்று வெளிவந்தவுடன் திருகோண மலை மக்கள் பெரும் ஆதரவுடன் அதனை வாங்கி வாசிப்பார்கள் என்ற ஒரு சாதாரண எதிர்பார்ப்பு பொய்த்துப்போன நாளாக எமது ஆறாவது பதிப்பை விற்கக் கொடுத்துவிட்டு ஐந்தாவது பதிப்பின் விற்பனைப் பணத்தையும் விற்காமலிருக்கும் எஞ்சிய பத்திரிகைகளையும் பெற்று வரச்சென்ற நாள் அமைந்தது. பெரும்பாலான கடைகளில் பத்திரிகைகள் விற்கப்படாமலே திரும்பியிருந்தன.



எமது தற்காலிக அலுவலகத்தில் கியூரின். பத்மபிரசன். யசோதினி

எனினும் அடுத்துவரும் ஆறு மாதங்களுக்கு இப்படித்தான் நடக்கும் என நான் முன்னரே நிதித் திட்டமிடலை மேற்கொண்டிருந்தேன். ஆகவே அடுத்து வந்த ஆறு மாதங்களும் விற்பனையில் அதிகரிக்கும் ஒவ்வொரு பத்திரிகையும் எனக்கு மகிழ்வையே தந்து கொண்டிருந்தது.

அந்த ஆறு மாதங்களிலும் மனதைச்சுட்ட விடயங்களில் முக்கியமானதாக, திருமலையின் முக்கிய பத்திரிகை விற்பனையாளர்கள் இருவர் நாம் வழங்குகின்ற பத்திரிகைகளை அப்படியே மீளத் திருப்பித் தந்து கொண்டிருந்தார்கள். அது கூடப் பரவாயில்லை... நாம் பத்திரிகைகளை வினியோகிக்கும்போது அப் பத்திரிகைக்கடை உரிமையாளர்களே ஆர்வமுடன் எமது பத்திரிகையை வாசிப்பதைக் கண்டிருக்கின்றோம். ஆனாலும் தாம் வாசித்த பத்திரிகைக்குக் கூட அவ்விருவரும் பணத்தைச் செலுத்தாமல் அடுத்தவாரம் திருப்பித் தருவதை அவதானித்த போது..... வியாபார தர்மம் என்பது அது தானோ? என்ற கேள்வி எம்முன் எழுந்தது.

இப் பண்புக்கு நேர் எதிர்மறையான பண்புடன் எமது ஆரம்பத் திகதியிலிருந்து இன்றுவரை எம்மை ஊக்கப்படுத்திய பத்திரிகை விற்பனையாளர்களில் முக்கியமாக நினைவில் வைக்கப்பட்டவர்கள் லேடீஸ் சென்றர், ஈஸ்ட் லிங்க், ராஜா புக்சொப், ரிங்கோ ஸ்ரேசனர்ஸ், நிரா ஸ்ரேசனர்ஸ், சுஜிர்தா புக் சொப், டில்கா கிறீம் ஹவுஸ் போன்ற நிறுவனங்களின் உரிமையாளர்களே.

இவர்களுள் முக்கியமாக, விற்காத பத்திரிகைகளுக்குக் கூட ஆரம்பத்தில் தனது சொந்தப்பணத்தைத் தந்து எம்மை ஊக்கப்படுத்திய ஹமீட் அவர்கள் மற்றும் இன்றுவரை தமது வாடிக்கையாளர்களுக்கு பத்திரிகைகளை எம்மிடம் விலைக்கு வாங்கி இலவசமாக வினியோகித்துவரும் ரிங்கோ ஸ்ரேசனர்ஸ் ஆகியோர் மலைமுரசின் உயர்வுக்கு உதவியவர்கள்.

நாட்களைக் கணக்கிட நேரமின்றி காலம் வேகமாக ஓடத் தொடங்கியது. மலைமுரசு மெதுவாக தனது தவழ்தலைத் தொடர்ந்து தட்டுத் தடுமாறி நிமிரத் தொடங்கியது. அந் நிமிர்வில் இரண்டு நல்ல விடயங்கள் நடந்தேறின. அவை என்னவென அடுத்தவாரம் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES

### உயிர்வாழ்வதற்கு இலவசங்களை வழங்கும் மத்தள விமானநிலையம்.

மத்தள விமான நிலையத்தை சூழவுள்ள பிரதேசம் தீர்வை அற்று இலவச ஏற்றுமதி இறக்குமதி நிலையமாக பிரகடனப்படுத்தப்பட உள்ளது.நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியால் கைச்சாத்திடப்பட்ட கட்டளை ஒன்றின் பிரகாரம் இறக்குமதித் தீர்வை, இறக்குமதி ஏற்றுமதி நிபந்தனைகள், பரிமாற்றக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றில் இருந்து முழு விலைக்கழிப்பை வழங்கும் உத்தரவாக அது அமைந்துள்ளது. இலங்கையின் முதலீட்டுச்சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள இறக்குமதி ஏற்றுமதி மீள்ஏற்றுமதி மற்றும் கரைகடந்த கம்பனிகள் இச்சலுகையை அனுபவிக்கும் உரித்துடையவை.

அண்மையில் மத்தள விமானநிலையத்திற்கு வருகைதரும் விமானங்களில் கையாள்கைச் செலவை 50 வீதத்தால் அரசு குறைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் பெருமளவு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை அரசு வழங்குகின்ற போதும் மத்தள விமான நிலையத்திற்கு வருகைதரும் விமானங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருப்பதாக வான்பறப்பு தொழில் துறையினர் தெரிவித்துள்ளனர்.

### பொது நலவாயமாநாட்டிற்கு அதிசொகுசு வாகனங்கள் . — அதற்கும் ஆசைப்படும் அமைச்சர்கள்.

பொது நலவாய மாநாட்டிற்கென அதிசொகுசு வாகனங்களை இறக்குமதி செய்யும் முடிவை அரசு எடுத்துள்ள நிலையில் அவ் அதிசொகுசு வாகனங்களான BMW 7 வர்க்கமாகவோ அல்லது பென்ஸ் - S வர்க்கமாகவோ இருக்கும் எனத் தெரிகிறது.

மாநாட்டின் பின் அவ்வாகனங்களை பொது ஏலத்தில் விற்று நிதியை திரட்டிக் கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்களில் சிலர் இவ்வாகனங்களை தமது அலுவலகப் பாவனைக்கு தந்துதவுமாறு அரசைக் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### நுண்நிதிக்கம்பனிகளை நிர்வகிக்க புதிய சட்டம்

நுண்நிதிக்கம்பனிகளை ஒழுங்குபடுத்தவும் நிர்வகிக்கவும் புதியநிபந்தனைகளையும் சட்டமூலங்களையும் பாராளுமன்றில் கொண்டுவரும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட மூலத்தில் நிதிக்கம்பனிகளையும் வைப்புக்களை ஏற்கும் வங்கிகளையும் உள்ளடக்கும் நிலைமையும் உள்ளது.

பாரிய நுண்நிதிக் கம்பனிகள் மத்திய வங்கியின் நேரடிக்கட்டுபாட்டின் கீழ் கொண்டுவரப்பட உள்ளன.

நடுத்தர நுண்நிதிக்கம்பனிகள் மத்திய வங்கியால் நியமிக்கப்படும் கணக்காய்வு நிறுவனங்களின் கண்காணிப்புக்குள் கொண்டுவரப்படும். அவ்வாறே சிறுநிலை நுண் நிதிக்கம்பனிகள் முறையே கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், திவிநெகும திணைக்களம் போன்றவற்றின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட உள்ளன.

வைப்புக்களை ஏற்றுக் கொண்ட சில கம்பனிகள் அவற்றை திரும்பிச் செலுத்தாத படியாலேயே இப்புதிய சட்டங்களை நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி முன்னெடுக்க உள்ளார்

### தரையிறங்கும் போது விமானம் சேதமாகியது.

ஸ்ரீலங்கா எயாலைன்ஸ்க்கு சொந்தமான விமானம் ஒன்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளாகியது.

இதற்கான காரணம் விமானியின் தவறு என ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக வான பறப்பு அதிகாரசபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

விமானத்தின் முன்பகுதி சேதத்திற்கு உள்ளாகி இருப்பதனால் அவ்விமானம் திருத்தங்களுக்காக பறப்பில் இருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை துபாயில் இருந்து இலங்கைக்குப் புறப்பட்ட விமானம் ஒன்று துபாய் விமான நிலையத்தில் இருந்து மேலே எழும் போது அதன் சக்கரங்களில் பற்றைகள் சுற்றப்பட்டிருப்பதாக துபாய் விமான நிலைய அதிகாரிகளுக்குத் தெரியவந்துள்ளது. அவர்கள் இலங்கை விமானத் தள அதிகாரிகளை எச்சரித்திருந்தார்கள்.

இலங்கையில் அவ்விமானம் தரையிறங்கும் போது பிரச்சனைகளை எதிர்கொள்ளும் என கடந்த வாரம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் விமானம் எவ்வித தடங்கலும் இன்றி தரையிறங்கியது.

### நவி.பிள்ளை அறிக்கை சமர்பிப்பார்

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள மனிதவுரிமைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளை அவர்கள், ஐ.நாவின் மனித உரிமை சபையின் கூட்டத்தொடரில் தனது பயணம் தொடர்பான அறிக்கையினை சமர்பிப்பார் என அவரது அலுவலக வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் 24 வது கூட்டத்தொடர் செப்ரெம்பர் 09ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கென அறிக்கையைச் சமர்பிக்கத் தகவல்கள் திரட்டும் நோக்கில் ஒகஸ்ட் மாதம் 29ம் திகதியில் இருந்து 31ம் திகதி வரை ஆணையாளர் இலங்கையில் அவதானிப்புக்களை மேற்கொள்வார்.

இலங்கையில் அவரது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக நவநீதம் பிள்ளையின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பாதுகாப்புப் பிரதானி இலங்கையில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நான் பணத்தை பெற்றுக்கொள்ளவில்லை — தயாஶ்ரீ மறுப்பு

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து அரசின் பக்கத்திற்கு பாய்ந்ததற்கு தான் பணப்பொதி ஒன்றை பெற்றுக் கொண்டுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் தயாஶ்ரீ, இக்குற்றச்சாட்டானது யார் எல்லாம் கட்சி தாவுகிறார்களோ அவர்களுக்கு எதிராக வைக்கப்படும் பொதுவானதொரு குற்றச்சாட்டே என தெரிவித்துள்ளார்.

அரசுடன் இரகசிய ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ள எதிர்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு தமக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### உயிர்பாதுகாப்பு அங்கிகளை அரசே தரவேண்டும்

மீன்பிடிக்கச் செல்பவர்கள் உயிர்ப்பாதுகாப்பு அங்கிகளை கட்டாயமாக அணியவேண்டும் என்ற கட்டுப்பாட்டை அரசு திடமாக முயன்று வரும் இவ்வேளையில் அவ் உயிர் பாதுகாப்பு அங்கிகளை தமக்கு அரசே வழங்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"மீனவர்கள் தற்போது கடுமையான பொருளாதார நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்கும் இவ்வேளையில் அரசிற்கும் வருமானத்தை ஈட்டித்தரும் இத்தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களை பாதுகாப்பது அரசின் கடப்பாடுகளில் ஒன்று என்று நாம் கருதுகிறோம் என" அகில இலங்கை மீன்பிடிச்சங்க செயலாளர் தெரிவித்தார்.

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சாடும் இலங்கை அரசு.

வடக்கில் உள்ள நிலமைகள் தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விடுத்துவரும் அண்மைய அறிக்கைகளால் சினம் அடைந்த அரசு தமிழ்த் தேசிய கூட்டமைப்பை கடுமையாக சாடத்தொடங்கியுள்ளது.

யுத்தத்தினால் அழிவடைந்த வடக்கை கட்டியெழுப்ப மேற்கொள்ளப்படும் அரச முயற்சிகளை

## The Sunday LEADER

இல்லாதொழிக்கும் செயற்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்து வருவதாக அமைச்சர் சுனில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தமது குடும்ப அங்கத்தவர்களை வெளிநாடுகளில் வாழவைத்துக் கொண்டு கொழும்பில் வாழும் அவர்கள் வடக்கைப் பற்றி அதிகம் பேசுகிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

### பிரித்தானியப் பாராளுமன்ற உறுபப்பினர் இலங்கையின் விசாரணையில் திருப்தி

பிரித்தானியப் பிரசையான கறாம் செய்க்கின் கொலைக்கு நீதி கிடைக்க வேண்டும் என இக் கொலை நடைபெற்றதிலிருந்தே குரலெழுப்பி வரும் பிரித்தானியப் பாராளுமன்ற எதிர்க்கட்சிப் பிரதிநிதி தற்போது அக் கொலை தொடர்பாக இலங்கை மேற்கொண்டு வரும் விசாரணைகள் முறையாக நடைபெறுவதாக திருப்தி தெரிவித்து ள்ளார்.

### காங்கேசன் துறை சீமெந்து ஆலை மீண்டும் இயங்கும்

1.5 பில்லியன் ரூபா முதலீட்டுடன் அரசு செயற்படாதிருக்கும் காங்கேசன்துறை ஆலையை தொழிற்பட வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கான நிதியினை இலங்கை மத்திய வங்கியிடம் இருந்து பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 12 ஆயிரம் சீமெந்துப் பொதிகளை உற்பத்தி செய்ய முடியும் என்ற எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்தினால் வருடம் ஒன்றிற்கு 13 மில்லியன் அமெரிக்க டொலர்களை இறக்குமதி செலவுகளில் இருந்து இல்லாதொழிக்க முடியும் எனவும் 300 நேரடித் தொழில் வாய்ப்புக்களையும் 400 நேரில் தொழில் வாய்ப்புக்கதையும் ஏற்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### பொதுநலவாய தேர்தல் கண்ணாணிப்பளர்கள் ஓகஸ்டில் இலங்கையில்

நடைபெற உள்ள மாகாண சபைத் தேர்தல்களைக் கண்காணிப்பதற்காக இலங்கைக்கு வரவுள்ள கண்காணிப்பாளர்களின் முதல் தொகுதியினர் ஓகஸ்ட் மாத முதல் வாரத்தில் இலங்கைக்கு வருகை தர உள்ளதுடன் அவர்கள் முறையே தேர்தல்களுக்கு முன், தேர்தலின் போது, தேர்தல்களுக்குப் பின்னரான கண்காணிப்புக்களை மேற்கொண்டு அறிக்கையைத் தயாரிக்க உள்ளார் என தேர்தல்கள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. அத்துடன் நவநீதம்பிள்ளையின் வருகையை ஒட்டி அவரது பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதம ஆ[illegible] இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நிறமூட்டப்பட்ட அஸ்பிறினுக்கும், பரசிற்றமோளுக்கும் தடை

இலங்கையில் நிறமூட்டப்பட்ட அஸ்பிறின் மற்றும் பரசிற்றமோல்கள் விற்பது மருந்துச்சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார்சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வறிவித்தலை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப படும் எனவும் தெரிவித்துள்ளார்.

### வன்முறையற்ற மாகாணசபைத் தேர்தலை எதிர்பார்கின்றோம்.

நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலானது ஏனைய தேர்தல்களுடன்

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

ஒப்பிடும் போது வன்முறைகள் குறைந்ததாக இருக்கும் என்றே தாம் எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் தொரிவித்துள்ளனர்.

எனினும் மூன்று மாகாணங்களிலும் 10 விசேட காவல்துறை அலுவலகங்கள் தேர்தல்கள் வன்முறைகள் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கென திறக்கப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். சட்ட மீறல்களுக்கு எதிராகவும் தேர்தல் வன்முறைகளுக்கு எதிராகவும் தகவல் அல்லது முறைப்பாட்டினை மேற்கொள்வதற்கு 24 மணி நேரசேவையினை அப்பத்து காவல்துறை அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 02

11. வானொலி அலையின் மீடிறன் $4500KHz$ அலைநீளம் $60m$ ஆகும். வானொலி அலையின் வேகம் யாது?
   1. $4500 \times 1000 \times 60ms^{-1}$ 2. $4500 \times 60ms^{-1}$
   3. $\frac{4500}{1000} \times 60ms^{-1}$ 4. $\frac{1000}{4500} \times 60ms^{-1}$

12. $8g$ காபனில் அடங்கியுள்ள அணுக்களின் எண்ணிக்கை? (அவகாதரோ மாறிலி $= 6.02 \times 10^{23}$)
   1. $\frac{12}{8} 6.02 \times 10^{23}$ 2. $12 \times 8 \times 6.02 \times 10^{23}$ 3. $\frac{8}{12} \times 6.02 \times 10^{23}$
   4. $8 \times 6.02 \times 10^{23}$

13. $25m$ தூரத்தில் தளவாடிக்கு முன் நிற்கும் மனிதன் தனது விம்பத்தில் இருந்து $10m$ தூரத்தில் நிற்கவேண்டுமெனின் அவன் எவ்வளவு தூரம் நடக்கவேண்டும்? 1. $10m$ 2. $20m$ 3. $15m$ 4. $25m$

14. சல்பூரிக்கமிலம் ஓர் நீரகற்றும் கருவியாக செயற்படுகிறது.

$$6CO_{2(g)} + 6H_2O_l \xrightarrow{H_2SO_4} C_6H_{12}O_{6(s)} + O_2$$

இங்கு $108g$ காபன் மீதி பெறப்பட வேண்டுமெனின் சுக்ரோசில் ஏற்பட்ட திணிவுக்குறைவு எவ்வளவு?
   1. $516g$ 2. $342g$ 3. $408g$ 4. $148.5g$

15. அ. முதலுருவிற்கு உறுதி அளிக்கின்றது.
   ஆ. கருவிற்கும், குழியவுருவிற்கும் பாலமாக அமைந்து கடத்தல் தொழிலை மேற்கொள்கிறது.
   இ. காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு அனுசேபத்தில் பங்கு கொள்கிறது.
   இவ்வாறான தொழில்களை மேற்கொள்ளும் புன்னங்கம் எது?
   1. றைபோசோம் 2. புன்மையத்தி 3. இழைமணி
   4. அகமுதலுருச் சிறுவலை

16. இங்கு $600N$ நிறையுடைய பொருளொன்று $400N$ எத்தனத்தை பிரயோகித்து தள்ளப்படுகிறது. சாய்தளத்தின் திறன் எவ்வளவு?




   1. 25% 2. 50% 3. 75% 4. 100%

17. சுவாசத்தின் போது வெளிவிடப்படும் சக்தி எதனுள் சேமித்து வைக்கப்பட்டுள்ளது?
   1. குளுக்கோசு 2. காபோவைதரேற்று
   3. அடினோசின் மூ பொசுப்பேற்று 4. அமினோவமிலம்

18. கீழே தரப்பட்ட உப்புக்களில் $25^\circ C$ இல் கரைதிறன் குறைந்த உப்பு எது?
   1. வெள்ளி குளோரைட்டு 2. பொற்றாசியம் சல்பேற்று
   3. கல்சியம் நைத்திரேற்று 4. கல்சியம் காபனேற்று

19. குருதியிலுள்ள நீரின் அளவு குறைவடையும்போது எவ்வோமோனின் செயற்பாடு காரணமாக மீண்டும் சிறுநீரகங்களினால் அகத்துறிஞ்சப்படும்?
   1. $TSH$ 2. $ACTH$ 3. $ADH$ 4. $FSH$

20. தற்காலத்தில் செயற்கை சுவையூட்டியாக பயன்படுத்தப்படும் பொருள் எது? 1. மொனோ சோடியம் குளூற்றாமேற்று 2. ஐதரொட்சி தொலுயீன்
   3. பியூற்றலேற்றட் 4. அப்பச்சோடா

21. தாவரங்களில் ஆரை வழியான நீர்கடத்தலின் சரியான ஒழுங்கு குறிப்பது?
   1. வேர்மயிர், மேற்றோல், மேற்பட்டை, பரிவட்ட உறை, அகத்தோல், காழ்
   2. வேர்மயிர், மேற்றோல், மேற்பட்டை, அகத்தோல், பரிவட்ட உறை, காழ்
   3. வேர்மயிர், அகத்தோல், மேற்பட்டை, பரிவட்ட உறை, மேற்றோல், காழ்
   4. வேர்மயிர், அகத்தோல், மேற்றோல், மேற்பட்டை, பரிவட்ட உறை, காழ்

22. குழிவாடியில் உண்மையான உருப்பெருத்த தலைகீழான விம்பம் பெறப்பட வேண்டுமாயின் பொருள் வைக்கப்பட வேண்டிய இடம் எது?
   1. $p-f$ இற்கு இடையில் 2. $c-f$ இற்கு இடையில்
   3. $c$ இற்கு அப்பால் 4. $f$ இற்குள்

23. வீட்டு மின்சுற்றில் சேவை உருகி பொருத்தப்படும் சரியான இடம்?
1. மின்மானிக்கு முன்பதாக 2. பிரதான ஆளிக்கும் மின்மானிக்கும் இடையில் 3. பிரதான ஆளிக்கும் இடறு ஆளிக்குமிடையில் 4. மின்மானிக்கும் பரம்பற்பெட்டிக்கும் இடையில்

### பாடம் - கணிதம், 02

11. சுருக்குக.
   1. $\frac{2.2 + 0.11 - 0.01}{0.9 + 1.1}$
   2. $\frac{2^{-5} \times 3a^3 \times b^5}{2^\circ \times a^{-2} \times b^7}$ (நேர்ச்சுட்டியில் தருக.) 3. $\frac{6a^2 \times 4b^3}{3(ab)^2}$

12. காரணிப்படுத்துக. $x^2 + 7xy + \frac{49}{4}y^2$

13. $x + \frac{1}{x} = a$ எனின், $x^2 + \frac{1}{x^2}$ தை $a$ யின் சார்பில் தருக.

14. $m + n = 9, mn = 5$ எனின், $m^2 + n^2$ இன் பெறுமதியைக் காண்க.

15. குழாய் $a$ ஆனது 10செக்கனில் $250ml$ நீரை நிரப்பக் கூடியது. குழாய் $b$ ஆனது 15 செக்கனில் $300ml$ நீரை நிரப்பக் கூடியது. ஒரு தாங்கியை நிரப்புவதற்காக இரு குழாய்களும் ஒரே நேரத்தில் திறக்கப்படுகின்றது. எனின், $8100l$ நீரை நிரப்ப தேவையான நேரம்?

16. $S = \frac{n(a+l)}{2}$ எனும் சூத்திரத்தில் $l$ ஐ எழுவாயாக்குக.

17. $8a^2, 3ab^2$ இவற்றின் பொ.ம.சி யைக் காண்க.

18. 5 மாணவர்களின் எடை $(Kg)$ இல் வருமாறு. 45, 47, $x$, 50, 43.
   1. இவற்றின் ஆகாரம் 50 எனின் $x$ இன் பெறுமானம் என்ன?
   2. இத்தொகுதியின் இடையத்தைக் காண்க.

19. வியாபாரி ஒருவர் பொருளொன்றை ரூ15000 இற்கு வாங்கி 20% இலாபம் வைத்து விலை குறித்தார். அதை விற்கும் போது 10% கழிவு கொடுத்து விற்றார் எனின்,
   1. அவர் குறித்த விலை யாது? 2. அவர் விற்ற விலை யாது?
   3. இலாபசதவீதம் யாது?

20. 37 என்ற அடி பத்து எண்ணை அடி இரண்டில் தருக.

21. இவ்வுருவின் பரப்பளவைக் காண்க.




## சென்ற வார விடைகள்

1. $6 \times \frac{2y}{3} = 6 \times \frac{x}{6} + 6 \times 1 \Rightarrow 4y = x + 6 \Rightarrow x - 4y + 6 = 0$

2. $\frac{n(n+1)}{2} \Rightarrow \frac{15(15+1)}{2} \Rightarrow 120$

3. அ. $V - U = at \Rightarrow \frac{V-U}{a} = t$

   ஆ. $\frac{1}{f} - \frac{1}{u} = \frac{1}{v} \Rightarrow \frac{u-f}{fu} = \frac{1}{v} \Rightarrow v(u-f) = fu \Rightarrow v = \frac{fu}{(u-f)}$

   இ. $a^2 + 2ac + c^2 = b^2 + d + c^2 \Rightarrow (a+c)^2 = b^2 + d + c^2 \Rightarrow$

   $\sqrt{(a+c)^2} = \sqrt{b^2 + d + c^2} \Rightarrow (a+c) = \sqrt{b^2 + d + c^2} \Rightarrow$

   $a = \sqrt{b^2 + d + c^2} - c$

4. $\frac{2+3}{(a-b)} \Rightarrow \frac{5}{(a-b)}$

5. $1000l$ நீர் எத்தனை பங்கு $= \frac{1}{3} + \frac{5}{8} = \frac{23}{24} \Rightarrow \frac{1}{24}$

   $\therefore$ நீர்த் தாங்கியின் கொள்ளளவு $= 24 \times 1000 = 24000l$

6. தந்தையின் தற்போதய வயது - 25

7. அ. $4n + 2$ ஆ. $Sn = \frac{n}{2}[2a + (n-1)d] \Rightarrow$

   $S_{10} = \frac{10}{2}[2 \times 6 + (10-1)4] \Rightarrow S_{10} = 5(12 + 36) \Rightarrow S_{10} = 240$

8. $\frac{4b}{3a^4}$

9. $\sqrt{(16+0.25)(16-0.25) + 0.25^2} = \sqrt{16^2 - 0.25^2 + 0.25^2} = \sqrt{16} = 4$

   * சென்ற வாரம் வினாவில் $\sqrt{16.25 + 15.75 + 0.25^2}$ என்பது $\sqrt{16.25 \times 15.75 + 0.25}$ என பிழையாக தரப்பட்டுவிட்டது.

10. $2a(4a^2 - 16) = 2a(2a+4)(2a-4)$

**கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் :**

**ஆசிரியர், குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியங்குளம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி உ  பாடம் - வரலாறு

1. இலங்கையின் நீர்வள நாகரிக தொழினுட்பத்தில் நுண்ணளவுத் திட்டத்தில் கட்டப்பட்ட அதிசயக்கால்வாய் என கருதுவது
   1. வசபனால் கட்டப்பட்ட சுரங்கவழி நீர்ப்பாசனம்
   2. தாதுசேனனின் ஜயகங்கை கால்வாய்
   3. மகாசேனனின் பப்பதந்த கால்வாய்
   4. 1ம் பராக்கிரமபாகுவின் அங்கமட்டில்ல கால்வாய்

2. சமவுயரக் கோட்டிற்கு அமைவாகக் கட்டப்பட்ட பிரசித்தி பெற்ற வாவி
   1. மின்னேரியா வாவி 2. பராக்கிரமசமுத்திரம் 3. கந்தளாய்குளம் 4. இராசதக்குளம்

3. குளத்தின் வான் கதவினால் ஆற்றப்படும் பணி
   1. குளக்கட்டை நீரரிப்பிலிருந்து பாதுகாத்தல்
   2. குளத்துக்குள் சேரும் அடையல், உக்கல்களைத் தடுத்தல்
   3. குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றல்
   4. குளத்தின் நீரை கால்வாய்க்கு விடுவித்தல்

4. மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைவது
   1. மராட்டியர், இராஜபுத்தர்களின் எதிர்ப்பு
   2. அக்பரின் கொள்கைகள் கைவிடப்பட்டமை
   3. பலவீனமான மன்னர்களின் ஆட்சி
   4. சாஜகானின் செயற்பாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சி

5. கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுடன் தொடர்புடைய இராசதானி
   - துங்கபத்ரா நதிக்கரையில் இருந்து இந்து பாரம்பரியத்தை பாதுகாத்தல்
   - வரதராஜர், கல்ரதம் போன்ற கோல்கள் அமைக்கப்படல்
   - பாமினி இராச்சியத்துக்கு சவாலாக விளங்குதல்

   1. சோழ 2. சேர 3. நாயக்க 4. பாண்டிய

6. வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர் தலைமையில் பிக்குகளுக்கு உபசம்பதாவிழா நடத்த பிக்குகள் அழைத்து வரப்பட்ட நாடு
   1. பர்மா 2. தாய்லாந்து 3. கம்போடியா 4. ஜாவா

7. இலங்கையில் சித்துல்பவ்வ சிலையை ஒத்த அவலோகிதேஸ்வரர் சிலை காணப்படும் ஆசிய நாடு
   1. சுமத்திரா 2. கம்போடியா 3. தாய்லாந்து 4. மியன்மார்

8. A – ஆட்சியுரிமை பண்முகப்பட்டிருத்தல்
   B – பிரதானிகள் அரசனுக்கு தேவையான படையுதவி அளித்தல்
   C – அரசன் சகல அதிகாரம் கொண்டவனாக விளங்குதல்
   D – அரசனுக்கு ஆலோசனை வழங்க உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல்

   மேற்படி விடயங்களில் மானிய முறையின் பண்பு அல்லாத விடைத்தொகுதி
   1.AB 2. BC 3. CD 4. AD

9. கீழ் குறிப்பிடப்படும் விடயத்துடன் தொடர்புடைய யாப்பு
   - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகம்
   - கல்வி கற்ற இலங்கையருக்கு சட்டவாக்க நிர்வாகத்தில் பங்குபற்ற வாய்ப்பு

   1.மனிங் 2. குறூமக்கலம் 3. டொனமூர் 4. சோல்பரி

10. கி.பி 1818ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்த தலைவர்கள் அடங்கும் தொகுதி
    1. ஹெப்பட்டிப்பொல, மடுகல்ல, வீரபுரன் அப்பு
    2. வீரபுரன் அப்பு, கொங்காலே கொடபண்டா, குடாபொலதேரர்
    3. ஹெப்படிப்பொல, வீரபுரன் அப்பு, குடாபொல தேரர்
    4. மடுகல்ல, பூட்டாவே ரட்டரால, ஹெப்பட்டிப்பொல

11. இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியும், அதனை ஆரம்பித்தவரும் சரியான ஒழுங்கு
    1. இலங்கை கொமியூனிஸ கட்சி - S.A.விக்கிரமசிங்க
    2. லங்கா சமசமாஜக் கட்சி - M.N.பெரேரா
    3. ஐக்கிய தேசியக்கட்சி - D.S.சேனநாயக்கா
    4. தமிழரசுக்கட்சி - S.J.V.செல்வநாயகம்

12. கீழ்க் காணப்படும் கூற்றுடன் தொடர்புடைய இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சியாளர்
    - மகாபோதித் சங்கத்தை ஆரம்பித்தல்
    - புத்தகயாவை மீட்க பாடுபடல்
    - ஆனந்த பாலிகா கல்லூரியை அமைத்தல்

    1. ஹென்றி ஸ்ரீல் ஒஸ்கொட் 3. அநாகரிக தர்மபால
    2. D.B.ஜயதிலக 4. மீகெட்டுத்த குணானந்த தேரர்

13. 1912ல் மன்-சூ வம்சத்தின் அதிகாரத்தை ஒழித்து சீனாவில் குடியரசு தலைவர் பதவியை பெற்றுக் கொண்டவர்
    1. யுவான்-ஷி-காய் 2. சூ-என்-லாய் 3. மாவோ-சே-துங் 4. ஷியாங்-காய்-ஷேக்

ஆசிரியர் :

**த.அகிலன்**, Dip. in Tech. (Merit)

புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை

வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் உ5

பிரதீபா

1. கிணறு ஒன்றில் எப்போதும் காணப்படுவது பின்வருவனவற்றில் எது?
   1. நீர் 2. மண் 3. குப்பை

**பின்வருவதை வாசித்து 2, 3ற்கு விடையளிக்கவும்.**

கல்லை ............கண்டனன்
கண்ணைக் கவரும் சிற்பமாய்
கல்லை மாற்றி அமைத்தனன்
கண்ட மக்கள் .................

2. * என்ற குறியீடு உள்ள இடத்திற்குப் பொருத்தமான சொல் எது?
   1. சிற்பி 2. ஓவியன் 3. கவிஞன்
3. # என்ற குறியீடு உள்ள இடத்திற்குப் பொருத்தமான சொல் எது?
   1. தூற்றினர் 2. போற்றினர் 3. எறிந்தனர்

**பின்வரும் பாடலை வாசித்து 4, 5ற்கு விடையளிக்கவும்**

தாமரை மலர் பூத்துச் சிரிக்கும்
இலைமேல் நீர் முத்துக்கள் போன்று பளபளக்கும்
காற்றில் நீரலைகள் மோதும்
உள்ளத்தை ஈர்க்கும் குளத்தின் அழகு

4. பாடலிற்கு ஏற்ப இக்குளம் அழகாகத் தோன்றுவதற்கான காரணம் என்ன?
   1. சுத்தமான நீல நிற நீர் இருப்பதும் தாமரைப் பூக்கள் மலர்ந்துள்ளமையும்
   2. தாமரைப் பூக்கள் பூத்துள்ளமையும் அழகான மீன்கள் காணப்பட்டமையும்
   3. தாமரைப் பூ பூத்துள்ளமையும் நீரலைகளின் மோதலும்
5. பாடலில் முத்துக்கள் என குறிப்பிடப்பட்டவை எவை?
   1. தாமரைப் பூ 2. நீரலை 3. இலை மேலுள்ள நீர்
6. எப்பிரதேசங்களில் தேயிலை அதிகமாக வளரும்
   1. மலைப்பாங்கான பிரதேசம் 2. தாழ்நிலம் 3. கரையோரப் பிரதேசம்
7. பின்வரும் கூற்றுக்களை வாசித்து சரியான விடையினைத் தெரிவு செய்க.
   அ. சூரியன் தினமும் கிழக்கில் தோன்றி மேற்கில் மறையும்
   ஆ. ஒரு தாவரத்தின் நிழல் காலையிலும் மாலையிலும் மேற்கு நோக்கிக் காணப்படும்.
   1. அ, ஆ சரி 2. அ மட்டும் சரி 3. ஆ மட்டும் சரி
8. பெரும்பாலானோர் தினமும் பத்திரிகைகள் வாசிப்பது
   1. நாட்டின் புதிய தகவல்களை அறிவதற்காகும்
   2. அறிவை விருத்தி செய்து கொள்வதற்காகும்
   3. விளம்பரங்களைப் பார்ப்பதற்காகும்
9. இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தவிர்க்க வேண்டிய உணவு
   1. தாவர எண்ணெய் சேர்க்கப்பட்ட உணவுகள்
   2. மீன் 3. மரக்கறி வகைகள்
10. எமது நாட்டின் தேசியக் கொடியிலும் தேசிய சின்னத்திலும் காணப்படுவது? 1. அரசமிலை 2. வாளேந்திய சிங்கம் 3. தர்மசக்கரம்
11. காகங்கள் கூடு கட்டுவது?
    1. இரவில் தூங்குவதற்கு 2. முட்டை இட்டு குஞ்சு பொரிப்பதற்கு
    3. மழைக் காலத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கு
12. மிகச் சரியான காரணத் தொடர்புள்ள வாக்கியத்தை தெரிவு செய்க
    1. ஆசிரியர் கூறிய அறிவுரைகளை மாணவர்கள் பின்பற்றினர்.
    2. மாணவர்கள் கூறிய அறிவுரைகளை ஆசிரியர் பின்பற்றினர்
    3. ஆசிரியர் கூறாத அறிவுரையை மாணவர்கள் பின்பற்றினர்
13. கனவுரு தொடர்பான பிழையான கூற்று எது?
    1. ஆறு முகங்களையும் ஆறு உச்சிகளையும் உடையது
    2. 12 நேர் விளிம்புகளைக் கொண்டது
    3. ஆறு முகங்களும் சதுரவடிவமானது
14. ஒரு விருந்தில் ஒருவருக்கு 2 கட்லட்டும் ஒரு வாழைப்பழமும் என்ற வீதத்தில் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட கட்லட்டினதும் வாழைப்பழத்தினதும் மொத்த எண்ணிக்கை 624 எனின், விருந்திற்கு வந்தவர்கள் எத்தனை பேர்?
    1. 312 2. 208 3. 280
15. மாணவன் ஒருவன் 10 நிமிடங்களில் 6Km தூரம் பயணஞ் செய்வானாயின், அவன் 1மணித்தியாலம் 15 நிமிடங்களில் செல்லக்கூடிய தூரம் என்ன?
    1. 69Km 2. 45Km 3. 450Km

பெயர்: .................................................................
.................................................................
முகவரி: .................................................................
.................................................................
.................................................................
பாடசாலை: .................................................................

## ரிங்கோ ஸ்ரேசனர்ஸ் வழங்கும் பரிசுகளை வெல்லுங்கள்

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

கடந்த வார வினாக்களுக்கான விடைகள்

1. 1 2. 2 3. 2 4. 1 5. 2 6. 3 7. 2 8. 2 9. 1
10. 1 11. 2 12. 1 13. 3 14. 3 15. 1 16. 2 17. 1 18. 1 19. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெண்மணிக்காக

உங்கள் மனைவிக்கு நல்ல கணவனாக இருக்க இதோ சில டிப்ஸ்

ஒரு சில மதங்கள் மணவாழ்வு ஆத்மீகப் பாட்டுக்கு எதிரானது என்று கூறுவதை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, திருமணத்தை அதிகமதிகம் இஸ்லாம் வலியுறுத்துகின்றது. “உங்களில் வாழ்க்கைத் துணையில்லாத ஆண் பெண்களுக்கு திருமணம் செய்து வையுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தால் தன் நல்லருளைக் கொண்டு அல்லாஹ் வாரி வழங்குவதில் விசாலமானவன்” (24:32)

இந்த வசனத்தில் இறைவன் திருமணம் செய்து வையுங்கள் என்ற ஏவலை பயன்படுத்தியுள்ளதிலிருந்து தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் பொறுப்பு பெற்றோர்களையே சார்ந்தது என்பது விளங்குகின்றது. குழந்தைகளை நல்லவிதமாக வளர்ப்பதும் அவர்களுக்கு சிறந்த வாழ்க்கைத் துணைகளை அமைத்துக் கொடுப்பதும் நல்ல பெற்றோர்களின் அடையாளமாகும். திருமண வயதை அடைந்தும் ஏழ்மையைக் காரணம் காட்டி திருமணத்தை தள்ளிப் போட வேண்டாம் என்ற வழிமுறையும் காணப்படுகிறது.

நீ காஹ் என்பது எனது வழிமுறை ஆகும். இதனை எவரொருவர் புறக்கணிக்கின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல என்பது நபி மொழி. மேற்கூறிய நபி மொழியிலிருந்து திருமணம் முஸ்லிம்களுக்கு எவ்வளவு அவசியமானது என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது. எனவே உங்களுடைய திருமணம் விவாகரத்திற்கு இட்டுச் செல்லாமல் இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

அதாவது பெண் 4 விடயங்களுக்காக திருமணம் முடிக்கின்றாள்.

1. மார்க்கம்
2. குலம்
3. செல்வம்
4. அழகு

இவற்றில் மார்க்கமுடைய பெண்ணை உங்களது வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுக்குமாறே இஸ்லாம் உங்களுக்கு கட்டளையிடுகிறது.

கீழே காணப்படும் நற்குணங்கள் உங்களிடம் காணப்பட்டால் நீங்களும் நல்ல கணவனே! அதாவது

மற்றைய பெண்களுடன் உங்கள் மனைவியை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள்.

மனைவியிடம் உள்ள குறைகளை மற்றவரிடம் குறையாகக் கூறாதீர்கள். அது உங்கள் உறவினரானாலும் சரி.

உங்கள் மனைவியின் அழகை உங்கள் நண்பர்களிடம் புகழாதீர்கள். அது உங்களுக்கே தீங்கை விளைவிக்கலாம்.

உங்கள் மனைவியின் ஒரு சில விடயம் வெறுப்பூட்டினாலும் அவளிடம் காணப்படும் நல்ல விடயத்தை ஏற்று மனதை ஆறுதல்படுத்துங்கள்.

மனைவியைப் பற்றி தவறாக வந்த தகவலை வைத்து தீர விசாரிக்காது மனதில் போட்டு பூட்டி வைத்து மனைவியை வீணாக துன்புறுத்தாதீர்கள்.

அவளுடன் புரிந்துணர்வோடு வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

உங்கள் இருவரிடையேயும் சந்தேகம் என்ற கொடிய நோய் தொற்றாது உங்கள் வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் சந்தேக தீ எரிந்தால் சந்தோசப் பூ எரிந்து சாம்பலாகிவிடும். எனவே சந்தேகப்படுவதை விட்டு விலகி நடந்து கொள்ளுங்கள். மனைவியை உங்கள் அடிமையைப் போல் நடத்தாதீர்கள். அவளுக்குரிய உரிமைகளை மற்றும் மரியாதைகளை முழுமையாக வழங்குங்கள். மனைவியின் தேவைகளை உணர்வுகளை புரிந்து அன்பாக நடந்து கொள்ளுங்கள்.

மனைவிக்கும் இதயம் என்ற உன்று உண்டு. அதில் பல ஆசைகளும் எதிர்பார்ப்புக்களும் உள்ளன என்பதை உணர்ந்து செயற்படுங்கள். மார்க்கம் கூறும் நல்ல விடயங்களில் அவளுக்கு பூரண சுதந்திரத்தை வழங்குங்கள். சிறு சிறு விடயங்களை பெரிதாக்கி மனைவியிடம் அடிக்கடி சண்டை போடாதீர்கள். அமைதியான முறையில் பேசி தீர்வு காண முற்படுங்கள். அதுவே உங்களுக்கு சிறந்த வழி.

இவை அனைத்திலும் மிக முக்கியமானது விட்டுக் கொடுப்பது. அனேகமான கணவன், மனைவிக்கிடையே பிரச்சனைகள் வருவதற்கான அடிப்படைக் காரணமாக இது அமைகிறது. நான் ஏன்! என்றில்லாமல். யாராவது ஒருவர் மற்றவருக்கு விட்டுக் கொடுத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

உங்கள் மனைவி உங்களிடத்தில் எதிர்பார்க்கும் முழுமையான அன்பைத் தாராளமாக அவளுக்கு வழங்குங்கள்.

- நஸ்மியா, மூதூர் -

## பெண்ணே புறப்படு

பெண்ணே!

உன் சமூகத்தின் முதுகெலும்பு நீதான்
நீயேதான்
நிமிர்ந்திடு இஸ்லாத்தின் பெயரால்
சென்றிடு
மனம் எனும் போர்க்களத்தில்
வென்றிடு
சைத்தானெனும் எதிரியை

பெண்ணே!

உன் சமூகத்தின் சீர்திருத்தவாதி
நீதான் நீயேதான்
அணிந்திடு ஹிஜாப் எனும் கவசத்தை
புறப்படு
சன்மார்க்கமெனும் யுத்தத்திற்கு
வீழ்த்திடு
சீர்கேடு எனும் சுவர்களை

பெண்ணே!

உன் சமூகத்தின் ஆயுதம் நீதான்
நீயேதான்
ஈமான் எனும் உற்சாக பானத்தை
சுட்டெரித்துவிடும் ஷீர்க் எனும்
கொடுங்கோலனை

“மேற்குலக மனிதன் இருட்டில்
விழித்துக் கொண்டான்
முஸ்லீம் வெளிச்சத்தில் தூங்குகிறான்.
இதுவே இன்றைய குழப்ப நிலைக்கு
காரணமாகும்.”

- முஹம்மத் அல்கஸ்ஸாலி -

## மி:.ராஜில் கண்ட காட்சி

புறம் பேசுபவர்கள் இத்தீய குணத்திலிருந்து விடைபெற்று முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நபி(ஸல்) அவர்கள் தான் மி:.ராஜில் கண்ட ஒரு சம்பவத்தைப் பின்வருமாறு விபரிக்கிறார்கள்.

*“நான் மி:.ராஜ் எனும் விண்ணுலகப் பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில் ஒரு கூட்டத்தை கடந்து சென்றேன். அவர்களுக்கு செம்பினாலான கூரிய நகங்கள் இருந்தன. அவற்றால் தமது முகங்களையும், மார்புகளையும் தாமே கீறிக் கிழித்துக் கொண்டிருந்தனர். இவர்கள் யார்? ஏன் இவ்விதம் நடந்து கொள்கின்றனர்? என ஜிப்ரீல் அவர்களிடம் வினவினேன். இவர்கள் தான் மக்களது மானங்களை இழக்கச் செய்து மனித மாமிசம் சாப்பிடுபவர்கள் என விளக்கம் கூறினார்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்”*

அறிவிப்பவர் : அனஸ்(ரழி)

மறுமையில் நடக்கவிருக்கும் இந்த பயங்கரத் தண்டனைக்கு அஞ்சி புறம் எனும் கொடிய குற்றித்திலிருந்து முற்றாக விலகிக் கொள்ள வேண்டும். இந்த நபி மொழியைப் படித்த பிறகும் எவராவது பிறரின் கண்ணியத்தில் அத்துமீறினால் அவர்கள் மறுமை நம்பிக்கையில் குறையுள்ளவர்கள் ஆவர்.

## மூதூர் காவல்துறையினரின் இப்தார் விழா

யுத்தத்தின் பின்னர் முதன் முதலாக மூதூர் காவல்துறையினர், அனைத்து மதங்களையும் சேர்ந்த சமயக் குரவர்கள், பல்லின மக்கள் மற்றும் அரச அதிகாரிகள், சிவில்பாதுகாப்பு அங்கத்தவர்கள் ஆகியோரை இணைத்து இப்தார் விழாவைக் கொண்டாடியுள்ளனர். 01.08.2013ல் நிகழ்ந்த இவ் விழாவானது அனைத்துச் சமூகங்களிடையேயும் சமாதானத்தை உருவாக்கும் நோக்குடன் காவல்துறைப் பொறுப்பாளர் பத்மலால் தலைமையில், பிரதம அதிதியாக கிழக்குமாகாண சிரேட்ட காவல்மா அதிபதி பூஜித ஜெயசுந்தரவின் பங்கு பற்றுதலுடன் நடாத்தப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.





இம்போட் அமைப்பு நடத்தும் ரமழான் கேள்வி பதில் நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும், இப்தார் நிகழ்வும் 29.07.2013ல் அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கு அனுசரணை வழங்கிய ஏ.எல்.நளீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர், இம்போட் பணிப்பாளர் எஸ்.எல்.முனாஸ் அதிதியாக கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கிவைத்தார். இதில் வெற்றி பெற்ற அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று மற்றும் ஏறாவூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 5 பேர் முதல் இடங்களைப் பெற்று பரிசில்களை பெற்றுக்கொள்வதை படங்களில் காணலாம். (எம்.பைஷல் இஸ்மாயில்)



Digitised by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நஞ்சூட்டப்பட்ட ....

அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்மாணவிகள் மூவரும் அருந்திய தண்ணீரில் அரலிக்காய் விசம் கலந்திருந்ததாக அவர்களின் பெற்றோர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சேருநுவர மகிந்தபுர ஸ்ரீமகாவலிகம வித்தியாலயத்தில் கல்விகற்கும் 13 வயதான ஆஷா சமன்மலி, சௌம்யா சந்தரேமா, சமன்குமாரி ஆகிய மூவரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள். 31ம் திகதி மதியம் பாடசாலையிலிருந்த அவர்கள் மதிய உணவின் பின்னர் சௌம்யா சந்தரேமாவின் தண்ணீர்ப் போத்தலில் இருந்த தண்ணீரை குடித்துள்ளனர். தண்ணீர் கசந்துள்ள போதும் அதனைப் பொருட்படுத்தாமல் அருந்தியுள்ளனர்.

சில மணித்துளிகளின் பின்னர் சௌம்யா சந்தரேமா கடுமையான தலைசுற்றலுக்குள்ளாகி வாந்தியெடுக்கத் தொடங்கியவுடன் ஏனைய இருவரும் வாந்தியெடுக்கத் தொடங்கினர்.

அதனைத் தொடர்ந்து அதிபரும், ஆசிரியர்களும் மாணவிகளின் தண்ணீர்ப் போத்தலை ஆராய்ந்த போது அத் தண்ணீரில் அலறி விசம் கலக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. உடனடியாக மாணவிகள் மூவரும் ஈச்சிலம்பற்று வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின் பொது வைத்தியசாலை திருகோணமலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். தற்போது 48 மணிநேர கண்காணிப்பிலுள்ள பிள்ளைகள் மூவரினதும் நிலை ஓரளவிற்குத் தேறியிருப்பதாகத் தெரிகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர் தகவல் தருகையில் பாடசாலையில் ஆசிரியர்கள் மேற்கொண்ட பரிசோதனையின் போது அதே வகுப்பு மாணவனொருவனின் பாடசாலைச் சீருடைப் பொக்கற்றினுள் இருந்து அலறி விதைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அம் மாணவன் சௌம்யா சந்தரேமாவின் அயல் வீட்டைச் சேர்ந்தவன் எனவும் தமக்கும் அந்த அயல் வீட்டினருக்கும் நீண்டகாலமாகப் பகை இருப்பதாகவும் அதன் காரணமாகவே தனது குழந்தைக்கு நஞ்சு பருக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இப்பொறிக்குள் அப்பாவிக் குழந்தைகள் இரண்டும் சிக்கியுள்ளனர். எனினும் சௌம்யா சந்தரேமாவின் பெற்றோரின் கருத்துக்களைச் சுதந்திரமான மூலமொன்றிலிருந்து உறுதி செய்ய முடியவில்லை.

## கிழக்கின் அபிவிருத்திக்கு ...

அங்கு முதலமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

2013 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைக்காக மாகாண சபை மூலம் ஏறக்குறைய 7000 மில்லியன் ரூபாய் கல்வி, சுகாதாரம், வீதி, நீர்ப்பாசனம், விவசாயம், மீன்பிடி, கால்நடை அபிவிருத்தி மற்றும் ஏனைய அனைத்து துறைகளுக்குமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திற்காக 2726 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் முதலில் எங்களுடைய இணைந்த ஒற்றுமையான செயற்பாடுகள் முக்கியமாகும். இதன் மூலமே அபிவிருத்தி தொடர்பான குறித்த இலக்கை அடையமுடியும் என்பது எனது கருத்தாகும்.

கடந்த காலங்களிலும் தற்போதும் நமது மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒவ்வொரு துறைகளுக்கும் பொறுப்பான கௌரவ அமைச்சர்களும், அதன் அதிகாரிகளும் முழுமூச்சுடன் காட்டிவருகின்ற அக்கறைக்கும் ஆர்வத்திற்கும் எனது பாரட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கே ஆராயப்படுகின்ற விடயங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் அதிகாரிகள் மிக முக்கிய கவனம் எடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது உங்களது தலையாயக்கடமை என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மாகாண நிருவாகம் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளும் குற்றச்சாட்டுகளும் கூறப்படுகின்ற இன்றைய காலகட்டத்திலேயே நாம் கலந்துரையாடல் மூலம் கால தாமதங்களை தவிர்த்து நேர்மையான திறமைமிக்க சேவைகளை மக்களுக்கு வழங்குவதன் மூலம் நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கு சளைக்காத வகையில் நமது மாகாணத்தையும் முன்னேற்ற முடியும் என்பதை நீங்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாண சபையில் உள்ள 5 அமைச்சுக்களினதும் செயலாளர்களும், பிரதிப் பிரதம செயலாளர்களும், 19 திணைக்களத் தலைவர்களும் மற்றும் 45 உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் இணைந்து செயலாற் றினால் நிச்சயம் நமது மாகாணம் வளங்கொழிக்கும் பூமியாக எதிர்காலத்தில் மற்றமடையும் என்பதை அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் கவனத்திற் கொண்டு செயற்படுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நாட்டின் துரித அபிவிருத்திக்காக பல்வேறு ஆக்க பூர்வமான சிந்தனைகளுடன் செயலாற்றும் ஜனாதிபதி அவர்களின் அபிலாசைகளையும் பூர்த்தி செய்து எதிர்காலத்தில் சிறப்பான செற்பாட்டுக்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினையும் ஆக்க பூர்வமான பங்களிப்பினையும் எதிர் பார்கின்றேன் என்றார்.

## கல்வியில் திருமலை....

கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

திருகோணமலை சென். ஜோசப் கல்லூரியில் திருகோணமலை மாவட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

“திருகோணமலை மாவட்டத்தில் நிலவி வரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக இந்த வருட இறுதிக்குள் மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் 452 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 452 பேருக்கான விண்ணப்பம் இந்த மாவட்டத்தில் இருந்து கிடைக்கவில்லை என்பதை உங்கள் முன் கூறுவதில் வெட்கமடைகிறேன். உங்கள் ஊருக்கு, உங்கள் கிராமத்துக்கு குறைந்தபட்சம் ஆசிரியர் தொழிலுக்கு தகுதியுடையவர்களையாவது நாம் உருவாக்கத் தவறி விட்டோமே.

இந்த நிலையில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அவற்றை நிரப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த விடயம் நாம் கல்வியில் பின்தங்கியிருக்கிறோம் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வெளிமாவட்ட ஆசிரியர்கள் ஓரிரு மாதங்களில் அவர்களின் சொந்த ஊருக்கு ஓடிவிடுகிறார்கள் என்று அதிபர்கள் அடிக்கடி என்னிடம் முறைப்பாடு செய்கின்றனர். இது உண்மையே இருப்பினும் இதற்கு நான் பொறுப்பல்ல.

பாடசாலை தேவைகள் குறித்து அரசியல்வாதிகளிடம் முன்வையுங்கள். அப்போது அவர்கள் ஆசிரியர் இடமாற்றத்தில் தலையிடமாட்டார்கள். இந்த விடயங்கள் அரசியல்வாதிகளுக்கு தெரியாமல் உள்ளன. எனவே அரசியல்வாதிகளை குறைகூற முடியாதுள்ளது. பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் பிரிவு என்பது ஓர் சாதாரண விடயம் என ஆசிரியர்கள் அதிபர்கள் நினைத்துக் கொண்டிருப்பது மிக மோசமான விடயமாகும். சூழல், குடும்பம், சமூகம் என்று பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்ட ஒரு மாணவனை சாதாரண வாழ்க்கை முறைக்கு கொண்டு வருவதென்பது சுலபமான விடயமல்ல. ஒரு மாணவனை அவனது பிரச்சினையில் இருந்து விடுவிக்க ஆறு மாதங்களும் எடுக்கலாம் ஆறு வருடங்களும் எடுக்கலாம். இதற்காகவே பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டலுக்காக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் தாம் எதற்கு நியமிக்கப்படுகிறோம் என்று தெரியாமல் அந்த ஆசிரியர்கள் வருடம் பூராவும் சும்மா இருந்துவிட்டு தான் ஓய்வூதியம் பெறும் வழியாக அந்த நியமனத்தைக் கருதுகிறார்கள்.

இந்த மாவட்டத்தில் தாய் மொழியிலும் அதிகமான மாணவர்கள் சித்தியடையாமல் இருப்பது சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். இதற்கான காரணம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாமை என்று அதிபர்கள் சாட்டுச் சொல்ல முடியாது. அன்று 2ஆம் 3ஆம் தரம் படித்தவர்களே இன்று கவிஞர்களாக உள்ளனர். எழுத்துப் பிழையின்றி எழுதுகிறார்கள்.

அன்று உபகரணங்கள் இல்லாமலே ஏராளமான விஞ்ஞானிகள் தோன்றினார்கள். இன்று நவீன கருவிகளும் வகை வகையான கற்பித்தல் சாதனங்களும் ஏராளம் அப்படியானால் ஒவ்வொரு நாளும் விஞ்ஞானிகள் தோற்றம் பெற வேண்டுமே? ஆசிரியர்கள் தாம் விஞ்ஞானிகளை உருவாக்க வேண்டிய காலத்தில் நாம் தாய்மொழியில் மாணவர்கள் சித்தியடையவிவில்லையே என்று பேசிக்கொண்டிருக்கிறோம்.

இந்த காலத்தில் ஆசிரிய ஆலோசகர்கள் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் என்று எவரும் இருந்ததில்லை. இந்த நிலையிலும் இன்று 11 ஆண்டுகள் ஒரு பிள்ளை கற்ற பின் பரீட்சையில் சித்தியடையவில்லை என்றால் எதற்காக இந்த கல்விக் குழாம்? என்று கேள்வி எழுப்பினார் கல்விப் பணிப்பாளர்.

## மரணம் நோக்கிய...

நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய அரசு எடுத்திருப்பதால் இவர்கள் அவுஸ்திரேலிய நாட்டுக்குள் நுழைய முடியாது. அத்துடன் கடந்தவாரம் ஜாவாத் தீவுகளுக்கு அருகில் ஏற்பட்ட படகு விபத்தில் ஆறு வயதுடைய இலங்கைச் சிறுவன், ஒன்றரை மாதக் குழந்தையொன்று உட்பட பல இலங்கைத் தமிழர்கள் பலியானதும் குறிப்பிடத் தக்கது. உண்மையில் எவ்வளவு பேர் பயணம் செய்தனர் என எவருக்கும் தெரியாததால் இறந்தவர்கள் அல்லது காணாமற் போனவர்கள் எத்தனை பேர் என தற்போதுவரை கண்டு பிடிக்க முடியாதுள்ளது. தகவல்களின் படி 204பேர் அப்படகில் பயணித்ததாகவும் 189பேர் மட்டுமே காப்பாற்றப்பட்டுள்ளதாகவும்15 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இறந்தவர்களுள் தற்போதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள ஆறுவயதுச் சிறுவன் இலங்கையைச் சேர்ந்தவர். மேலும் ஐந்து சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

(கீத், கதிரவன், சுதன்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கமறியலில் மாணவர் கொலைச் சந்தேக நபர்கள்!



திருகோணமலை மாணவர் படுகொலையின் சூத்திரதாரிகள் என சந்தேகிக்கப்பட்டவர்களின் விளக்கமறியல் ஆகஸ்ட் 5ம் நாள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விசேட கோரலுக்கு அமைவாக 01.08.2013ல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஐந்து மாணவர்களின் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் அதிரடிப்படையைச் சேர்ந்த உதவிக் காவல் ஆய்வாளர் உட்பட 12 சந்தேகநபர்களும் மீண்டும் விளக்கமறியலில் இடப்பட்டுள்ளனர்.

மொரட்டுவைப் பலகலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் உட்பட பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருந்த மேலும் நான்கு மாணவர்களை சந்தேக நபர்கள் திருகோணமலைக் கடற்கரையில் வைத்து சுட்டுக்கொலை செய்திருந்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## 84 சாரதி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன

கிழக்கு மாகாணசபையில் காணப்படும் சாரதி வெற்றிடங்களை நிரப்புவதற்கு கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

84 சாரதிகளுக்கு கிழக்கு மாகாண சபையில் வெற்றிடங்கள் நிலவுவதாகவும் அதனால் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கடுமையான நெருக்கடிகளைத் திணைக்களங்கள் எதிர்கொள்வதாகவும் கடந்த மாதம் நிகழ்ந்த கிழக்கின் அமைச்சரவை அமர்வுகளில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

விசேடமாக வைத்தியசாலை நோயாளர் வாகனச் சாரதிகளுக்குப் பெருமளவு வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அதனால் நோயாளிகளை உரிய நேரத்திற்குப் பொருத்தமான வைத்திய சாலைகளுக்கு இடமாற்றம் செய்ய முடியாத நிலையைப் பல தள மற்றும் பொது வைத்தியசாலைகள் எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திலுள்ள சாரதி வெற்றிடங்களை நிரந்தர நியமன அடிப்படையிலும், வருடாந்த ஒப்பந்த அடிப்படையிலும் நிரப்புவதற்கு மாகாணசபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி 34 சாரதிகளை உள்ளக தேர்வு முறையில் நிரந்தரமாக நியமிப்பது என்றும் வெற்றிடமான ஏனைய 50 இடங்களுக்கும் வருடாந்த ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பது என்றும் தீர்மானமாகியுள்ளது.

# 'தமிழ்த்தூது' தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட திருமலையில் புதிய அமைப்பு

தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா ஈழம் எங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் வேளையில் திருகோண மலையில் அவ் விழாவைச் சிறப்பாக முன்னெடுக்க திருமலையின் ஆயர் வணக்கத்திற்குரிய கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் தலைமையில் புதிய அமைப்பொன்று உருவாகியுள்ளது.

"தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டுத் தமிழ்ப் பண்பாட்டுச் சபை" என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள அவ் அமைப்பில் தலைவராக திருமலையின் ஆயர் அவர்களும், துணைத் தலைவராக ஓய்வுபெற்ற பிரதி அரச அதிபர் நா. புவனேந்திரன் அவர்களும், செயலாளராக மலைமுரசின் பிரதம ஆசிரியர் ஸ்ரீஞானேஸ்வரனும் தெரிவாகியுள்ளனர். பொருளாளராக மக்கள் வங்கயின் பிரதான கிளையின் முகாமையாளர் கே. செல்வராஜா செயற்படவுள்ளார். இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இப்பண்பாட்டு விழாவில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் சொற்பொழிவுகளையும் ஒருங்கிணைப்பவர்களாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகப் பீடாதிபதி கலாநிதி.சி. ரகுராம் அவர்களும் வண. அருட்தந்தை மதுராங்கன் குருஸ் அவர்களும் செயற்படவுள்ளனர். அடிகளாரின் நினைவுமலர் மற்றும் அவரது காணொளித் தயாரிப்புப் பணிகளில் கலாசார உத்தியோகத்தர் திரு.வி. குணபால அவர்களும் வண. அருட்தந்தை அருள் வரதன் அவர்களும் செயற்படவுள்ளனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ந.விஜயேந்திரன் அவர்களின் வழிகாட்டலில் கலைநிகழ்வுகளுக்குப் பொறுப்பாக விக்னேஸ்வரா பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி.மதிவதனி அவர்களும் கல்வியாளர்களுக்கு அடிகளார் தொடர்பாக அறிவுறுத்தும் செயற்பாட்டை ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திருமதி.சி.பத்மநாதன் அவர்களும் முன்னெடுக்கவுள்ளனர்.




மலைமுரசு
MALAIMURASU

**பத்திரிகைக்கு மாணவப் பத்திரிகையாளர்கள் தேவை**

பகுதிநேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ செய்தியாளர் ஆகலாம்
மூன்று மாதப் பயிற்சியின் பின் கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் தரகினை உழைக்க முடியும்

தொடர்பு - இல 159A, இரண்டாம் மாடி, திருகோணமலை
0777 555 738 075 42 52 042


# 14 கிராமங்களுக்கு 1300 மில்லியன்

ஜப்பானிய ஜய்க்கா நிறுவன உதவியுடன் கிழக்கிலுள்ள 14 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப் படவுள்ளன. இத்திட்டத்திற்காக அந்த நிறுவனம் சுமார் 1300 மில்லியன் ரூபாய்களைச் செலவிடவுள்ளது.

இவ் அபிவிருத்தித் திட்டங்களுள் சிறிய அளவிலான வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்தி, நீர் விநியோகத் திட்டங்களின் அபிவிருத்தி போன்றவை முன்னெடுக்கப்படவுள்ளன.

கிழக்கிலுள்ள மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 14 கிராமங்கள் இதற்காகக் கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சரால் முன்மொழியப்பட்டிருந்தன.

அதற்கமைய அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் முறையே ஐந்து கிராமங்களும், மட்டக்களப்பில் 4 கிராமங்களும் இவ் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், சம்மாந்துறை நாவிதன்வெளி, குளாவெள - தம்பிட்டிய மிறிஸ்வெத்த ஆகிய கிராமங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டுமுறிவு, உன்னிச்சை, கொக்கட்டிச் சோலை, ஏறாவூர்பற்று கிராமங்களும், திருகோணமலை மாவட்டத்தில் பள்ளிக்குடியிருப்பு, சுமேதங்கபுர, மணியரசன்குளம், மொறவெவ வடக்கு, வாழையூற்று ஆகிய கிராமங்களும் விருத்தி செய்யப்படவுள்ளன.

அத்துடன் கிழக்கில் நிலவும் கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களுக்கான சிங்கள ஆசிரியர் வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கு அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

அதன் பிரகாரம் ஓய்வுபெற்ற சிங்கள ஆசிரியர்களை மாதாந்தம் 25,000 ரூபா கொடுப்பனவு செய்து வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கு வருட ஒப்பந்தத்தில் இணைத்துக்கொள்ளும் முயற்சியில் மாகாண கல்வித் திணைக்களம் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org